அருள் தரும் இமயம்

thirukkalyanamatha.com

# திருக்கல்யாணத்தாய்

## பிறந்தார் மீட்பர்..!



மலர் : 3 இதழ் : 12 டிசம்பர்–2012

(தனிச்சுற்றுக்கு மட்டும்)

# திருக்கல்யாணத் தாய்

www. thirukalyanamatha.com தொலைபேசி : 04639 ! 261230

kalyanamatha@gmail.com



ஆசிரியர் & வெளியிடுபவர்
அருட்திரு பபியான் ஜோசப்

ஆலோசகர் குழு
அருட்திரு. ஜாண் போஸ்கோ
அருட்திரு. சிலுவை தங்கம்
அருட்திரு. டென்சில் ராஜா
அருட் சகோதரி. புளோரா

ஆசிரியர் குழு
அருட் சகோதரி. லீமா ரோஸ்
திருத்தொண்டர்.பபிஸ்டன்
திரு. ஜெயசீலன் அந்தோணிராஜ்
திரு. அந்தோணி ஜெயராஜ்
திரு. ஜோசப் ததேயூஸ் ராஜா
திருமதி. ரெவின்யூஸ் ராணி
திரு. மெசியாஸ்

விளம்பரம்செய்ய
தொடர்புகொள்ள
04639-261330
04639-261230



தொடர்பு முகவரி
பங்குத் தந்தை
திருக்கல்யாண மாதா ஆலயம்
பொத்தக்காலன்விளை 628 702
தூத்துக்குடி மாவட்டம், தமிழ்நாடு
தொலைபேசி : 04639 : 261230


## மலரின் உள்ளே...


| | |
|---|---|
| ஆசிரியரின் அருளுரை | 1 |
| உலகத் திருச்சபை செய்திகள் | 2 |
| மறைமாவட்ட செய்திகள் | 3 |
| பங்குச் செய்திகள் | 4 |
| அறிவோம் அன்னையை | 6 |
| அற்புதங்கள்... சாட்சிகள் | 11 |
| கிறிஸ்மஸ் குடில் | 18 |
| திருக்குடும்பம் | 22 |
| புனித பிரான்ஸிஸ் சவேரியார் | 25 |
| புனித மரியாயே | 28 |
| திருக்கல்யாண தாய் திருவிழா | 30 |
| குறுக்கெழுத்துப்போட்டி | 32 |



வாங்கிவிட்டீர்களா !

**திருக்கல்யாணத்தாய் மாதத இதழ்**

சந்தா செலுத்தி உறுப்பினர்களாகச் சேர்ந்து பயன் பெறுங்கள்

உங்களுக்காக ஜெபிக்கிறோம். ஆண்டு சந்தா ரூ. 100

இணைந்து ஜெபிப்போம்! இணைந்து பணியாற்றுவோம்!!

# ஆசிரியரின் அருளுரை



திருக்கல்யாண அன்னையின் அன்புபிள்ளைகளே உங்கள் அனைவருக்கும் என் ஆசிகளையும் அன்பின் வாழ்த்துகளையும் தெரிவிப்பதில் மட்டற்ற மகிழ்ச்சியடைகிறேன். இந்த மாத இதழ் கிறிஸ்துமஸ் சிறப்பிதழாக வெளிவருகிறது. பாவஇருளை அகற்றவந்த பேரொளியாம் நம் ஆண்டவர் சூசை – மரியின் அன்பு குழந்தையாய் மாட்டுக்கொட்டிலிலே தவழ்ந்த இந்த காட்சியினை நம் மனக்கண்களிலே கண்டு மகிழும் இனிய தருணம். இது இடையர்களும், அரசர்களும் பெத்லேகம் சென்று பிள்ளையைக் கண்டு வணங்கினார்கள். நாமும் ஆலயம் சென்று இறைவனை வணங்கி அருள் பெருவோம், அடுத்திருப்பவரை அன்பு செய்து வாழ்வோம். பாவமே இல்லாமல் உற்பவித்த நம் தேவ அன்னையிடம் சரணடைவோம். மரியாளின் திருக்குடும்பத்தை போலவே நம் அனைவரின் குடும்பங்களும் மகிழ்ச்சியாகவும்,எல்லா ஆசிகளும் நிரம்பி வழிகின்ற ஆனந்த குடிலாகவும் திகழ அன்பு,பொறுமை, தியாகம், மன்னிக்கும் மாண்பு,விட்டுக்கொடுக்கும் பெருந்தன்மை, பிறர்நலம் நாடும் மனப்பான்மை போன்ற உயரிய பண்புகளுடன் வாழக் கற்றுக்கொள்வோம்

“ நான் உன்னை விட்டு விலகுவதும் இல்லை
உன்னைக் கைவிடுவதும் இல்லை”

என்று வாக்குரைத்த இறைமகன் நம் அனைவரோடும் இருந்து நம்மை வழிநடத்துவாராக!.
அனைவருக்கும் எனது இனிய கிறிஸ்து பிறப்பு வாழ்த்துக்களையும் ஆசிகளையும் வழங்கி மகிழ்கிறேன்.

இயேசுவுக்கே புகழ்! இயேசுவுக்கே நன்றி!!

அன்புடன்

**பங்குத் தந்தை**
பொத்தக்காலன்விளை.



# உலகத் திருச்சபை செய்திகள்

## ஏழு புதிய புனிதர்கள் திருச்சபைக்கு

திருத்தந்தை 16ஆம் பெனடிக்ட் பல நாடுகளைச் சேர்ந்த ஏழு அருளாளர்களை புனிதர்கள் நிலைக்கு உயர்த்தினார். இந்த புதிய புனிதர்களில் நான்கு பேர் பெண்கள். இவர்களில் 1896 ஆம் ஆண்டு மடகாஸ்கா நகரில் கொல்லப்பட்ட பிரான்ஸ் நாட்டு இயேசுசபைக்குரு ஜாக்கியுஸ் பெர்த்தியூ மற்றும் குவல் தீவில் 1872ஆம் ஆண்டில் கொல்லப்பட்ட பிலிப்பைன்ஸ் நாட்டு 17வயது வேதியர் பீட்டர்கலூங்சோட்டும்,

இரண்டு மறைசாட்சிகள் அடங்குவர். இதில் இரண்டு அருளாளர்கள் கல்விக்கென தங்கள் வாழ்வை அர்ப்பணித்தவர்கள். மேலும் 1911 ஆம் ஆண்டில் இறந்த ஸ்பெயின் நாட்டு அன்னை கார்மன் சாலஸ், அமலமரி சபைச்சகோதரி. 1913 இல் இறந்த இத்தாலி நாட்டு அருட்பணி ஜியோவானி பியோமர்த்ததா. அமெரிக்கப் பழங்குடிப்பெண் கேத்தரி,ஹவாய் தீவில் தொழுநோயாளர்களுக்காக பணிபுரிந்த அன்னை மரியானி கோப் மற்றும் ஜெர்மனியின் அன்னசிஹாபர்!இவர்கள் தங்கள் வாழ்நாள் துன்பங்களைக் கடவுளுக்காகத் தாங்கிக்கொண்டவர்கள்.

## நம்பிக்கை ஆண்டு நம் விசுவாசத்தை துணிவுடன் வாழ அழைப்பு

எதை நாம் விசுவாசிக்கின்றோமோ அதைப் போதித்து அதையே வாழ்வில் நடைமுறைப்படுத்தவே இந்த இறை நம்பிக்கை ஆண்டின் கட்டாயத்தேவை என்று சீன ஆயர் கான் ஜிவான்கிவ் 13வது உலக ஆயர்கள் பேரவைக் கூட்டத்தில் கூறினார்.

## விசுவாசத்தை வெளிப்படுத்துவதே நெருக்கடி நிறைந்த உலகில் நற்செய்திப்பணி

புதிய நற்செய்தி அறிவிப்புப் பணிபற்றி ஆழமாக ஆய்வு நடத்தப்பட்டு 13வது உலக ஆயர்கள் பேரவையில் புதிய நற்செய்தி அறிவிப்புப் பணியில் குடும்பங்கள் மறக்கப்படக்கூடாது என்றும், பெற்றோர்கள் தங்கள் குழந்தைகளுக்கு மறைக்கல்வி வழங்குவது தாய் சேய்க்கு பாலூட்டுவதுபோல் நடைபெறவேண்டும் என்று 17வதுபொது அமர்வில் கூறப்பட்டுள்ளது.கடவுள் எண்ணமற்றவர்களையும் கடவுளுக்காக ஏங்குகின்ற இன்றைய நெருக்கடி நிறைந்த உலகில் நம்பிக்கையை வெளிப்படுத்துவதே புதிய நற்செய்தி அறிவிப்புப்பணியின் நோக்கம் என்று ஹாங்காங் ஆயர் கர்திகால்டாங்ஹான் கூறினார்

–நன்றி : **நம்வாழ்வு**



# மறை மாவட்ட செய்திகள்



- 2-11-2012 அன்று மாலை மேதகு ஆயர் அவர்க்ள் தலைமையில் தூத்துக்குடி கல்லறைத் தோட்டத்தில் வைத்து சகல ஆன்மாக்களுக்காக வேண்டித் திருப்பலி நிறைவேற்றப்பட்டது.

- 2.4-11-12 அன்று மேதகு ஆயர் அவர்கள் தலைமையில் வள்ளியூரில் வைத்து இளைஞருக்கான கருத்தரங்கு நடைபெற்றது.

- .06-11-12 அன்று குறுக்குச்சாலை,மணப்பாடு,தூத்துக்குடி,வடக்கன்குளம் மறைமாவட்ட குருக்களுக்கான மாதாந்திர தியானம் முறையே குறுக்குசாலை அடைக்கலாபுரம், ஆயர் இல்லம், வடக்கன்குளம் ஆகிய இடங்களில் வைத்து நடைபெற்றது.

- .07-11-2012 அன்று சாத்தான்குளம் மறைமாவட்ட குருக்களுக்கான மாதாந்திர தியானம் சாத்தான்குளத்தில் வைத்து நடைபெற்றது.

- .17-11-12 அன்று மாலை மறைமாவட்ட நிதிக்குழு கூட்டம் மேதகு ஆயர் அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

- 19-11-2012 அன்று காலை மறைமாவட்ட கல்விக்குழு கூட்டமும் அன்று மாலை மறைமாவட்ட பணிக்குழுக்களின் செயலர்கள் கூட்டமும் மேதகு ஆயர் அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

- 20-12-2012 அன்று மாலை பெரியசாமிபுரத்தில் வைத்து அருட்சகோதரர். பாக்கிய ஜோசப் ராஜ் அவர்கள் மேதகு ஆயர் அவர்களால் குருவாக திருநிலைப்படுத்தப்படடார்கள்.

- .21-11-2012 அன்று மாலை அமலி நகரில் வைத்து அருட்சகோதரர்.சங்கீதன் அவர்கள் மேதகு ஆயர் அவர்களால் குருவாக திருநிலைப்படுத்தப்பட்டார்கள்.

- .24,25=11-2012 ஆகிய இரு நாட்களும் பணகுடி பங்கு மக்களை சந்தித்து மேதகு ஆயர் அவர்கள் உரையாடினார்கள்.

- கர்நாடகா மாநிலத்தில் அக்டோபர் மாதம் 16ம் தேதி உடுப்பி மறைமாவட்டம் என்ற புதிய மறைமாவட்டம் தோற்றுவிக்கப்பட்டது. இதன் முதல் ஆயராக மேதகு.ஜெரால்டு ஐசக் லோபோ அவர்கள் நியமிக்கப்பட்டார்கள். இது கர்நாடகாவில் 14-வது மறைமாவட்டமாகும். இந்தியாவில் இது 166வது மறைமாவட்டம் ஆகும்.

நன்றி- **மறைமாவட்ட செய்திகள்**

# பங்குச் செய்திகள்

பொற்பை பங்கில் மறைபரப்பு ஞாயிறு காணிக்கை

| | | |
|---|---|---|
| பொற்பை | = | 17,115.00 |
| கொழுந்தட்டு | = | 2,880.00 |
| நவமுதலூர் | = | 1,888.00 |
| | | 21,883.00 |

நம்பிக்கை ஆண்டு 11-10-2012 முதல் 13-11-2013 இதன் துவக்க விழா 14-11-2012 அன்று நமது பங்கில் சிறப்புத் திருப்பலியுடன் கோலாகலமாக ஆரம்பிக்கப்பட்டது.

**<u>நமது பங்கின் நம்பிக்கை ஆண்டு செயல்பாடுகள் :-</u>**

**10 அம்ச திட்டங்கள் :**

1.விசுவாச ஆண்டு முடிவதற்குள் ஒவ்வொரு குழுக்களுக்கும் தனித்தனியாக சிறப்பு ஒருநாள் கருத்தரங்கு நடத்தப்படும்.

2.திருமணமானவர்கள், திருமணமாகாதவர்கள் மற்றும் பள்ளி மாணவ மாணவிகளுக்கு சிறப்பு தியானங்கள் நடத்தப்படும்.

3.நமது வாழ்வில் நடைபெற்ற விசுவாசத்தை வளர்க்கும் நிகழ்வுகளை அன்பியங்களில் பகிரலாம்.

4.ஏப்ரல் மாதம் வீடு சந்திப்பு மற்றும் வீடுகள் மந்திரித்து ஜெபிக்கப்படும்.

5.மூன்று சிறப்புக் கலைநிகழ்ச்சிகள் விசுவாச ஆண்டை சிறப்பிக்கும் விதத்தில் மூன்று மாதத்திற்கு ஒருமுறை நடத்தப்படும் (புனிதர்கள் பற்றிய நாடகங்கள் மற்றும் பொது வினாடி!வினா போட்டிகள்)

6.மறைக்கல்வி வகுப்புகளில் மாணவ மாணவிகளுக்கு விசுவாசத்தைப் பற்றிய சிறப்புப் பயிற்சிகள் கொடுக்கப்படும்

7.பங்குத்தந்தை பிப்ரவரி மாத இறுதிக்குள் அன்பியங்களை சந்தித்து பங்குப்பேரவை அமைக்க ஆவன செய்வார்.

8.வணக்க மாதத்தை இன்னும் சிறப்பாகக் கொண்டாடி ஒவ்வொரு நாளும் சம்பந்தப்பட்ட குடும்பத்திற்காக ஜெபித்தல்.

9.முக்கியமான திருத்தலங்களுக்கு மாநிலம் விட்டு மாநிலம் செல்லத் திருப்பயணம் ஏற்பாடு செய்யப்படும்.

10.விசுவாச ஆண்டு நிறைவுவிழா ஆடம்பரத் திருப்பலி, கலைநிககழ்ச்சிகள் மற்றும் சம்பந்தி விருந்தும் நடத்தப்படும்

குறிப்பு:

மேற்கொண்டு வழிபாடுகள்,நிகழ்ச்சிகள் மற்றும் கொண்டாட்டங்கள் சிறப்பாக அமைய விசுவாசத்தில் திடப்படுத்தப்பட்ட பல்வேறு வகைகளில் உங்கள் ஒத்துழைப்பைத் தருமாறு கேட்டுக்கொள்கிறோம்.

அனைத்து குடும்பங்களுக்கும் 28-10-2012 அன்று மறைபரப்பு ஞாயிறு காலண்டர்கள் வினியோகம் செய்யப்பட்டது.

நவம்பர்-2: அன்று கல்லறைத் தோட்டப் பெருவிழா சிறப்புத் திருப்பலி மற்றும் மந்திரிப்பு சடங்குகள் கல்லறைத்தோட்டத்தில் நடைபெற்றது.

திருப்பலி முடிந்தவுடன் சிற்றுண்டி வழங்கிய குடும்பங்களுக்கு நன்றி!

27-10-2012 அன்று மறைமாவட்ட மேய்ப்புப் பணி பேரவையின் பொது அமர்விற்கு நமது பங்கிலிருந்து திரு.ஜேம்ஸ், திருமதி.ரெஜினாமேரி, திருமதி. ரெலின்பூஸ் ராணி அவர்கள் தூத்துக்குடியில் கலந்துகொண்ட திரு.வர்க்கீஸ்,திரு.ஜெகதீஸ் அவர்களை பாராட்டுகிறோம், திரு.வர்க்கீஸ் மறைமாவட்ட பொறுப்பாளராக தேர்ந்தெடுக்கப்பட்டார். பாராட்டுக்கள்.

2013-ம் ஆண்டு ஊர்த்திருவிழாவிற்கான சிறப்பு பொதுக்கூட்டம் (100வது ஆண்டு தேரோட்ட திருவிழா) டிசம்பர் மாதம் 2-ம் தேதி மாற்றி வைக்கப்பட்டுள்ளது.

ஊரின் நற்கருணை வீரர் சபை திருவிழா நவம்பர் 16-முதல் நவம்பர் 23 வரை வழக்கமான உற்சாகத்துடன் சிறப்பாக கொண்டாடப்பட்டது.

## புதிய நிர்வாகிகள்:

தலைவர்: திரு.இருதயராஜ். து.தலைவர்.திரு.அந்தோணி அருள்செல்வன் செயலாளர்:திரு.பிலவேந்திரன் து.செயலாளர். திரு.லாரன்ஸ், பொருளாளர்.திரு.அந்தோணி ஏசுதாசன். னி.பொருளாளர்.திரு.சிலுவைபிச்சை

கிளைப்பங்கு கொழுந்தட்டு புனித சவேரியார் ஆலய திருவிழா 24-11-2012 அன்று கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி 03.12.2012 அன்று காலை திருவிழா திருப்பலியும் மாலை சப்பரப்பவனியும் நடைபெறுகிறது.

கிறிஸ்மஸ் விழா சிறப்பு அம்சமாக மாபெரும் குடில் ஒன்று ஆலய வளாகத்தில் அமைக்கப்பட்டு பணி நடந்து வருகிறது. உபயம் செய்த காமராஜ் குடும்பத்தாருக்கு நன்றி

## வின்சென்ட்-தே-பவுல்-சபையின் 2011-2012 வரவு செலவு விபரம்

| | |
|---|---|
| 1-4-2011-ல் முன்னிருப்பு | 52,288,00 |
| 31-03-2012 - வரை வரவு | 94,825.00 |
| மொத்த வரவு | 1,47,113.00 |
| மொத்த செலவு (31-03-2012 வரை) | 90,065.00 |
| 01-04-2012 - ல் இருப்பு | 57,048.00 |

## வின்சென்ட்-தே-பவுல்-சபையின் புதிய பொறுப்பாளர்கள்:

தலைவர்:திரு.ஜோசப் மிக்கேல் ஜேம்ஸ், துணைதலைவர். திரு.வர்க்கீஸ், செயலாளர்.செல்வி.விண்மதி, து.செயலாளர்.செல்வி.பெனிட்டா, பொருளாளர். திரு.பெலிக்ஸ் அந்தோணி, து.பொருளாளர். திரு.அருண் வினோத்

**- பங்குத்தந்தை**

# அறிவோம் அன்னையை!



- பெர்நதத் என்ற பெண்ணுக்கு 18 முறை லூர்து நகரில் மரியாள் காட்சியளித்தார்.

- பிராங்க் டப்ஸ் மரியாளின் சேனையை தோற்றுவித்தவர் ஆவார்.

- கொலம்பஸ் பயணம் செய்த கப்பலின் பெயர் சாந்த மரியா.

- மே,அக்டோபர் மாதங்கள் அன்னைக்காக ஒப்புக் கொடுக்கப்பட்ட மாதங்கள் ஆகும்.

- மிசிசிபி நதி அமலோற்பவ நதி என்று முன்பு அழைக்கப்பட்ட நதியாகும்.

- குரானில் 34 முறைக்கு குறையாமல் மரியன்னைப் பற்றி குறிப்பிடப்பட்டுள்ளது.

- மரியன்னையின் பிறப்பு,கோயிலில் மரியாள் வளர்க்கப்பட்டது. கபிரியேல் தூதரின் மங்கள வார்த்தை மற்றும் இயேசுவின் பிறப்பு பற்றி குரானில் கூறப்பட்டுள்ளது.

- பேராயர் ஃபுல்டன் ஷீன் வேத போதக ஜெபமாலையை தோற்றுவித்தார்

- ரபேல் 30 முறையும் 25 முறையம் கிறிஸ்துவர்களின் சகாய அன்னையின் உருவத்தை வரைந்த ஓவியர்கள் ஆவர்.

- புனிதர்கள்,பொனவெஞ்சர்,மான்போர்ட்,லிகோரி,தாமஸ்மூர் ஆகியோர் மரியன்னையின் எழுத்தாளர்களுள் சிலர் ஆவர்.

– **ஜெ. ஜெனி,** பொற்பை

## ஒரு நாளில் நமது உடலில் நிகழும் அதிசயங்கள்

1. இருதயம் 1,03,680 தடவைகள் துடிக்கின்றது.
2. இரத்தம் 16,80,000 மைல்கள் ஓடுகினறது.
3. சுவாசம் 22,040 தடவைகள் நிகழ்கின்றன
4. 483 கன அடி காற்றை உட்கொள்கிறோம்
5. 7,7,இராத்தல் கழிவு ஏற்படுகின்றது.
6. 1.43 பைண்ட் வேர்வை வெளிவருகின்றது.
7. 3.25 இராத்தல் உணவு சாப்பிடுகின்றோம்.
8. 29 இராத்தல் திரவ பதார்த்தம் அருந்துகிறோம்
9. உறக்கத்தில 15 முதல் 30 தடவை புளுகின்றோம்
10. 48,000 வார்த்தைகள் பேசுகின்றோம்.
11. 750 பெரிய தசைநார்கள் இயக்குகிறோம்
12. 0.000046 அங்குலம் நகம் வளருகிறது.
13. 0.01714 அங்குலம் தலைமுடி வளர்கிறது.
14. 70,00,000 மூளை அணுக்கள் வேலை செய்கின்றன.

நெல்சன்.மதுரை **வி.ஜி.ஏ ஆல்பர்ட்**

## திருக்குடும்பம்...

அன்னை மரி வயிற்றில் உருவாகி
ஆசையாய் இறைசித்தம் நிறைவேற
இயேசு பாலன் பிறந்தார்
ஈன்ற மாட்டுத் தொழுவத்திலே
உறங்கா கண்ணோடு தாய்மரி
ஊக்கமாய் பாலனைத் பாதுகாத்தார்.
எத்தனையோ பல இன்னல்கள்
ஏற்றார் பாலன் இயேசுவுக்காக !
ஐயமின்றி விசுவாசித்ததால்
ஒப்பந்தமான துணை யோசேப்புடன்
ஓர் அன்பு குடும்பமாய் வாழ்ந்து,
நற்செய்தியை அஃதே வாழ்ந்து
காட்டினார்.

! **ஜெயந்தி சலேற்**
**திசையன்விளை**

## சிலுவை ஓர் புனித சின்னம்..

பாவச் சேற்றில் கிடக்கும்
நம்மை தூக்கி எடுக்க வந்த
பளிங்கு மரம்
தலைச் சாய்க்க இடமில்லை
என்றவருக்கு
சாய கிடைத்த முள் தலையணை
எந்தன் பாவக் கடன்களை
அடைக்க நான்
தெரிந்து கொண்ட அடைக்கலம்
பகையைச் கொன்று
இருதிறத்தாரையும்
ஒப்புரவாக்கிய புனித சின்னம்!

**ஜோஸ்பின்மேரிதாசன்**
**கவரப்பேட்டை**

## இறை அன்பு...

தாய்,குழுந்தையினிடத்தில்
கொண்ட அன்பு
மனைவி, கணவனிடத்தில்
கொண்ட அன்பு
கற்றார், உற்றாரிடத்தில்
கொண்ட அன்பு
பகலவன்,நிலவினத்தில்
கொண்ட அன்பு
பகல், இராவினடத்தில்
கொண்ட அன்பு
முதியோர்,அரவணைப்போரிடம்
கொண்ட அன்பு
பசி உள்ளவன்,உணவினிடத்தில்
கொண்ட அன்பு
நாம் உலகினிடம் கொண்ட அன்பு
இவ் அனைத்திலும் மேலான அன்பு
நாம் இறைவனிடத்தில் கொண்ட இறையன்பு

**பவித்ரா**
**வண்டலம்பாடு**









# நன்றிகள் பலகோடிகள்
# 06.10.2012 முதல்சனி
# உணவு நன்கொடையாளர்கள்

| | |
|---|---|
| அந்தோணி பிச்சை,பாத்திமா மேரி கொழுந்தட்டு | 1000.00 |
| குறிப்பிட்ட நபர் (பொற்றை) | 501.00 |
| லீலா சேவியர், (கன்னியாகுமரி) | 500.00 |
| ஏசுவடியான் (கவரப்பேட்டை) | 500.00 |
| பிலிப்பு மெற்றில்டா, பொற்றை | 10,000..00 |
| ஜோசப்ராஜ் டாரதி, (நொச்சிகுளம் | 500.00 |
| பெயர்சொல்ல விரும்பாத நபர் | 1000.00 |
| சகாய சந்தனராஜ் (அந்தோணியார்புரம்) | 2000.00 |
| சிவவை அந்தோணி கனி (பொற்றை) | 500.00 |
| லூக்காஸ் மளிகை (திருப்பூர்) | 1000.00 |
| குறிப்பிட்ட நபர் (பொற்றை) | 200.00 |
| அந்தோணிராஜ் (பொற்றை) | 500.00 |
| செல்வராஜ் மெர்ஸி (பொற்றை) | 500.00 |
| பெயர் சொல்ல விரும்பாத நபர் (கொல்லம்) | 450.00 |
| பெயர் சொல்ல விரும்பாத நபர் (பொற்றை) | 3300.00 |
| சுரேஷ் (பொற்றை) | 500.00 |
| அன்பரசி – தர்மராஜ் (சங்கரன்குடியிருப்பு) | 500.00 |
| செல்வன் (பூந்துறை) | 100.00 |
| செந்தில், வித்யா,தனுஷியா,தனுஷ் (குழித்துறை) | 101.00 |
| விமல் நின்சா (பாரசாலை) | 101.00 |
| அந்தோனி பிள்ளை – ரோசாரி (குளச்சல்) | 1011.00 |
| டோன் போஸ்கோ (பூந்துறை) | 501.00 |
| ஆரோக்கிய ஜான் பீட்டர் – ஜான்ஸி (ம/துரை) | 301.00 |
| சிவபெருமாள் (சாத்தான்குளம்) | 21.00 |
| விஜயன் – பெர்னத்மேல (சூசைபுரம் | 100.00 |
| கனியூட் ராஜ்(சூகாவளம்) | 500.00 |
| ஸ்டீபன் பவுலின் (கொம்புத்துறை) | 800.00 |
| தாசன் – சிம்லா (உவரி) | 500.00 |
| ஜெகன் – ஜெகன்(மறவன்குடியிருப்பு) | 1000.00 |
| முருகேசன் (நறயன்குடியிருப்பு) | 1000.00 |
| கிறிஸ்டோபர் – டென்னிஸ் (சென்னை) | 500.00 |
| மேரி கமலீஸ் (சென்னை) | 500.00 |
| புனிதா ததேயு (வெல்லவிளை) | 501.00 |
| ஆன்டனி (கன்னியாகுமரி) | 2000.00 |
| மைக்கிள் ரூபன் (பொள்ளாச்சி) | 100.00 |
| அனிஷ் மெஸ் (பொள்ளாச்சி) | 100.00 |

| | |
|---|---|
| மோரிஸ் (உவரி) | 5000.00 |
| பட்டுராஜ் (பொற்பை) | 3000.00 |
| மரிய சற்குணம் (பொற்பை) | 500.00 |
| பிரான்ஸிஸ் சேவியர் (சொக்கன்குடியிருப்பு | 200.00 |
| சுரேஷ் பாண்டியன் (பொற்பை) | 100.00 |
| கென்னடி (தூத்துக்குடி) | 100.00 |
| அந்தோணி செல்வன் ராஜரஜீலாமேரி | 500.00 |
| ரேனிஷ் பியூட்டி வெல்வேட் (நாகர்கோவில்) | 3000.00 |
| மார்ட்டின் (குளச்சல்) | 500.00 |
| அந்தோணிராஜ் – பபிதா (கோவில்பட்டி) | 2000.00 |
| ஞானப்பிரகாசம் (வாழையடி) | 1000.00 |
| பெயர் சொல்ல விரும்பாத நபர் மேல்மிடாலம் | 500.00 |
| அலெக்ஸ் (புத்தளம்) | 500.00 |
| ந்ன்பிரட் அசில் சீமா (முட்டம்) | 1000.00 |
| இத்துவதாஸ் (நாகர்கோவில்) | 500.00 |
| அந்தோணி சாம்ஸக் (பொற்பை) | 1000.00 |
| ஆபேல் மரியரத்தினம் கடியப்பபடினம் | 5000.00 |
| அருள் ஜெயராஜ் – சிதம்பரம் | 500.00 |
| மொத்தம் | 58088.00 |

## முதற்சனி உணவுப்பொருள் நன்கொடையாளர்கள்

| | |
|---|---|
| எட்வின் காமராஜ் டெய்சி குடும்பத்தினர் | 10000 சாப்பாடு பிளேட் |
| அந்தோணி ஸ்டாலின் (பொற்பை) | தேங்காய் 5 |
| குறிப்பிட்ட நபர் (பொற்பை) | தேங்காய் 6 |
| பால்ராஜ் (பிரகாசபுரம்) | வாழைத்தார் 1 |
| மலர் (பெங்களூர்) | பீடப்பூக்கள் |
| அன்னையின் அடிமை (பொற்பை) | பீடப்பூக்கள் |
| சிவவை பிரகாசம் !ஜோஸ்பின் (பொற்பை) | அரிசி 25 கிலோ |
| ஜெயச்சந்திரன் (கோயம்பேடு) | ம.பூசணி 1 மூடை, உருளை 60 கி |
| நீலகிரி புரோட்டாஸ், சென்னை | வெங்காயம் 2 மூடை |
| S.R.I சென்னை | உருளை 1 மூடை |
| ஈஸ்வரன் (கோயம்பேடு) | தக்காளி 8 பெட்டி |
| பரணி (கோணம்பேடு) | வெங்காயம் 50 |
| ரவீஸ்டர் (பொற்பை) | உருளை 1 மூடை,கேரட் 60 கி, ப.மிளகா 70 கி, மாங்காய் 10 கி |
| சுரேஷ் (கோயம்பேடு) | பீன்ஸ் 30 கி |
| சித்திரை ராஜ் (உடன்குடி) | அரிசி 25 கி |
| பெயர் சொல்ல விரும்பாத நபர் | அரிசி 300 கி |
| ராஜேஷ் அமலா (பொற்பை) | அரிசி 100 கி |
| லீமா ஞானம் (மலேசியா) | அரிசி 50 கி |
| சைமன் ஜெகதீஷ் (மூகாம்பிகை) | அரிசி 50 கி |
| ஜஸ்டின் (சென்னை) | அரிசி 100 கி |
| பெயர் சொல்ல விரும்பாத நபர் | அரிசி 100 கி |

| | |
|---|---|
| சூசை மிக்கேல் (கோவை) | அரிசி 50 கி |
| ரூபி ஸ்டோர் (பொற்பை) | அரிசி 50 கி |
| மாதரசி (கீழ்மணக்குடி | அரிசி 25 கி |
| மத்தியாஸ் (ஆனந்தன் நகர்) | அரிசி 25 கி |
| பற்ரோஸ் (மாடத்தட்டுவிளை) | அரிசி 10 கி |
| பெயர் சொல்ல விரும்பாத நபர் (குறும்பனை) | அரிசி 25 கி |

## முதற்சனி மதிய உணவு செலவு விபரம் : (03.11.2012)

| | |
|---|---|
| சமையல் யோவான் | 11000.00 |
| சுப்பையா தூய்மை பணி | 1000.00 |
| ரூபி ஸ்டோர் இருதயராஜ், 5 மூடை அரிசி | 16250.00 |
| அந்தோணி ராஜ் விறகு 3 டன் | 9500.00 |
| ஜோசப் மளிகை | 63,093.00 |
| இம்மான் வண்டி வாடகை 10 நடை | 1350.00 |
| சென்னை காய்கறி பஸ் செலவு | 700.00 |
| வின்சென்ட் உணவு விடுதி | 918.00 |
| ஜஸ்டின் மின்னல் தண்ணீர் மூடை 100 | 5000.00 |
| ஜெயக்குமார் வண்டி வாடகை 3நடை | 600.00 |
| தூய யோவான் ஆலய பாத்திர வாடகை | 200.00 |
| தூய மிகாவேல் ஆலய பாத்திர வாடகை | 400.00 |
| தேவ அமிர்த ராணி கடை செங்கல் 200 | 1220.00 |
| திருக்கல்யாணி ஒலி ஒளி பள்ளி வளாகம் | 400.00 |
| மொத்தம் | 111,631.00 |

| | |
|---|---|
| முன்னிருப்பு வங்கியில் | 1,49,847.00 |
| நன்கொடை மூலம் வரவு | 58088.00 |
| முதற்சனி மீதி பொருட்கள் ஏல வரவு | 6590.00 |
| ஜோஸ் குடும்பத்தினர் வங்கியில் | 3000.00 |
| மொத்தம் | 217525.00 |
| | 111631.00 |
| இறுதி இருப்பு | 105894.00 |
| வங்கியில் | 105886.00 |
| கையில் | 8.00 |
| இறுதி இருப்பு | 105894.00 |

## திருத்தலக்கடை வரவு செலவு விபரம்

| | |
|---|---|
| 30.09.12 அன்று இருப்பு | 82,350.00 |
| 01.10.12 முதல் 31.10.12 வரை விற்பனை | 1,59,253.00 |
| மொத்தம் | 2,41,603.00 |
| 01.09.12 முதல் 30.09.12 வரை செலவு (பொருட்கள் + சம்பளம்) | 84,199.00 |

– திருத்தலக்கடை நிர்வாகிகள்




# திருக்கல்யாணத்தாயின் அற்புதங்கள்... சாட்சிகள்...

1.தைராய்டு குணம் பெற்றதற்கு நன்றி ! - **அனு தூத்தூர்**

2.வீடு கட்ட உதவி கிடைத்தமைக்கு நன்றி ! - **ராஜு,அகிலா,தூத்தூர்**

3.திருமண வரம் கிடைத்தமைக்கு நன்றி ! – **வினோத்,ஸ்பிக் நகர்**

4.குழந்தை வரம் கிடைத்தமைக்கு நன்றி

**– தங்கத்துரை,அல்போன்ஸ்,பெனார்சி,சேர்ந்மதரம்.**

5. திருமண வரம் கிடைத்தமைக்கு நன்றி ! –**அனுஷியா , அனந்தன்நகர்**

6.ஆசிரியர் தகுதித் தேர்வில் வெற்றி கிடைத்தமைக்கு நன்றி

**–திவ்யா,வினோத் ,பொற்பை**

7.திருமண வரம் கிடைத்தமைக்கு நன்றி ! –**கில்பர்ட், கண்டன்விளை**

8.நல்ல தொழில கிடைத்ததற்கு நன்றி ! –**ஸ்டார்லட் , பாடசேரி**

9.வேலை கிடைத்தமைக்காக நன்றி.

**– மு.மேரி ஸ்டெல்லா கென்னடி, மேக்கா மண்டபம்**

10.10-ம் வகுப்பில் அதிக மதிப்பெண் எடுத்ததற்காக நன்றி.

**– மு.மேரி ஸ்டெல்லா கென்னடி, மேக்கா மண்டபம்**

11..மூன்று வயது குழந்தை 5 ரூபாய் நாணயத்தை வழுங்கி, நான்காவது நாள் அற்புதமாக வெளி வந்தமைக்கு நன்றி.

**– இணையம், மர்சலின்**

12.தேர்வில் வெற்றி பெற்றமைக்காக நன்றி

**– ரெனி, சாலினி நாகர்கோவில்.**

13.திருமணவரம் கிடைத்தமைக்கு நன்றி. **– கோகிலா, தூத்துக்குடி**

14.தேர்வில் வெற்றிபெற்றமைக்காக நன்றி **– மிதுன்யா, கூடுதாழை**

15.உறவினர் நன்மைக்காக நன்றி, மனமாற்றமடைந்தமைக்கு நன்றி

**– ஜேம்ஸ் ராஜம்மா, தூத்தூர்.**

16.திருமண வரம் கிடைத்தமைக்காக நன்றி.

**– எட்வின், மேரிஸ் டேலா , ஹீபிலி கர்நாடகா**

***–பங்குத்தந்தை***

# உங்களுக்காக நாங்கள் ஜெபிக்கிறோம்

**தொடர்பு கொள்ளுங்கள் : 04639 !261230 , 261330**

**நவம்பர் 2012 முதல் சனி அன்னையிடம் சமர்ப்பிக்கப்பட்ட விண்ணப்பங்கள்**

| | | |
|---|---|---|
| திருமணவரம்கிடைக்க | ! | 2875பேர் |
| குழந்தைபாக்கியம் | ! | 1862 பேர் |
| சுகப்பிரசவம் | ! | 2548 பேர் |
| நற்சுகம்பெற | ! | 2637 பேர் |
| ஆன்மீகநலன்களுக்காக | ! | 1488 பேர் |
| தேவஅழைத்தல் | ! | 1482 பேர் |
| வேலைகிடைக்க | ! | 1881 பேர் |
| தொழில்முன்னேற்றம் | ! | 2815 பேர் |
| குடும்பசமாதானம் | ! | 2515 பேர் |
| குடும்பநலன் | ! | 2104 பேர் |
| உறவினர்நன்மைக்காக | ! | 1930 பேர் |
| தேர்வில்வெற்றிபெற | ! | 2023 பேர் |
| அலகைதொல்லைதீர | ! | 1637 பேர் |
| மனஅமைதிக்காக | ! | 1929 பேர் |
| அறுவைசிகிச்சைவெற்றிபெற | ! | 1461 பேர் |
| மனமாற்றமடைய | ! | 1533 பேர் |
| குடிப்பழக்கத்திலிருந்துவிடுபட | ! | 1687 பேர் |
| நல்லஇல்லம்அமைய | ! | 1841 பேர் |
| சோதனைகளைவெல்ல | ! | 1797 பேர் |
| கடன்தொல்லைதீர | ! | 2377 பேர் |
| வழக்கில்வெற்றிபெற | ! | 1642 பேர் |



**அருள்தரும் இமயமே! திருச் கல்யாணத் தாயே! உம்பிள்ளைகளுக்காக வேண்டிக்கொள்ளும்.** **- பங்குத்தந்தை**

**உங்கள் ஜெபஉதவிக்கு ்ஙகள் இணையதள முகவரி**

**kalyan matha@gmail.com**

## பங்கு மக்களுக்கு முக்கிய அறிவிப்பு

### ஆசிரியர் பணிக்கான பதிவை புதுப்பித்தல்:

28,07.2012 அன்று நடைபெற்ற மறைமாவட்ட கல்விக் குழுவின் தீர்மானத்தின்படி ஆசிரியர் பணிக்கான பதிவை புதுப்பித்தல் 2013!ம் ஆண்டு ஜனவரி மாதம் மட்டும் நடைபெறும். எனவே பங்கில் ஆசிரியப் பணிக்காக பதிவு செய்திருப்பவர்கள் பங்குத் தந்தையை சந்தித்து பங்குத்தந்தையின் கையொப்பம் பெற்று பதிவை புதுப்பித்தற்கான ஏற்பாடுகளைச் செய்து கொள்ள கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

Z¤©A:‡ ஜனவரி மாதத்தில் புதுப்பிக்கத் தவறியவர்களுக்கு எந்தக் காரணத்தை காட்டினாலும் மற்ற மாதங்களில் கண்டிப்பாக புதுப்பித்தல் நடைபெறாது.

**!பங்குத்தந்தை**

## எக்ஸ் மஸ்... 'X'Mas

கிறிஸ்து பிறந்த நாளை கிறிஸ்துமஸ் என்கிறோம். சரி. அது எக்ஸ்மஸ் ("mas") என்றும் அழைக்கப்படுகிறதே. அது ஏன் அதற்கு ஒரு காரணம் உள்ளது. ஆங்கிலத்தில் நாம் பயன்படுத்தும் X என்ற எழுத்துக்கு கிரேக்க ரஷ்ய மொழிகளில் வேறுவிதமான உச்சரிப்பு உண்டு. எக்ஸ் கிரேக்க மொழியில் இந்த எழுத்தை 'கி' (kg) என்றுதான் உச்சரிப்பார்கள். கிரேக்க மொழியில் இந்த எழுத்து 14வது எழுத்து ஆகும். அந்த 'கி' கிற்ஸ்து என்ற பெயரின் முதல் எழுத்து என்பதால் கிறிஸ்துமசை சுருக்கமாக எக்ஸ்மஸ் என்று குறிப்பிட ஆரம்பித்தார்கள்.அப்புறம் என்ன கிறிஸ்துமசை விட, இந்த எக்ஸ்மஸ் ஆங்கிலம் பேசும் நாடுகளில் எல்லாம் பிரபலமாகிவிட்டது.

–டே.ஜெர்லின், வெள்ளக்கோவில்

## டிசம்பர் மாதத்தின் முக்கிய தினங்கள்

டிசம்பர் 1 – உலக எய்ட்ஸ் தினம்
டிசம்பர் 2 – அடிமைத்தனத்தை ஒழிக்க ஐ.நா.சர்வதேச தினம்
டிசம்பர் 2 – உலக கணிப்பொறி அறிவு தினம்
டிசம்பர் 3 – உலக ஊனமுற்றோர் தினம்
டிசம்பர் 4 – இந்திய கடற்படை தினம்
டிசம்பர் 7 – தேசிய கொடி நாள்
டிசம்பர் 10 – மனித உரிமைகள் தினம்
டிசம்பர் 14 – உலக ஆற்றல் தினம்
டிசம்பர் 23 – உலக விவசாயிகள் தினம்
டிசம்பர் 25 – கிறிஸ்மஸ்

**சேகர்–சென்னை**

## தெரியுமா உங்களுக்கு –மாநில சின்னம்

ஸ்ரீவில்லிப்புத்தூர் கோயில் – கோபுரவடிவம் அதன்மேல் அரைவட்ட வளைவில் தமிழ்நாடு அரசாங்கம் என்ற வார்த்தையும் பொறிக்கப்பட்டு இருக்கும். அதன்கீழ்,தேசிய சின்னமும்,அதன் இரு புறங்களில் தேசியக்கொடியும் வரையப்பட்டிருக்கும். "வாய்மையே வெல்லும்" என்ற வார்த்தையும் பொறிக்கபபட்டிருக்கும்.

## தமிழ்நாடு பெயர் மாற்றம்

**18–07–1967–ல் சட்டமன்றத்தில் நிறைவேறிய தீர்மானத்தின்படி சென்னை மாநிலம் "தமிழ்நாடு" என்று பெயர் மாற்றம் பெற்றது.**

**ஜெயக்கொடி – பொற்பை**

# வாசகர் உள்ளம்...



★ உலக திருச்சபை செய்திகள் திருக்கல்யாண ஒற்றுமையின் அவசியத்தை பற்றியும், நல்லுறவு தரும் விசுவாசித்தில் நிலைத்து வாழ வேண்டிய கருத்தை அழகாக எடுத்துக் கூறுகின்றது.

**செல்வக்குமார்** – தஞ்சை

★ பங்கு செய்திகள் வெளியிடங்களில் வசிக்கும் எங்களை போன்ற பங்கு மக்களுக்கு பங்கின் நிகழ்வுகளை அறிந்து கொள்ள ஏதுவாக இருந்தது.

**விஜய்** – கோயம்புத்தூர்

★ கவிதைச் சோலை அன்னையின் புகழை மணம்வீசுவதாக அமைந்திருந்தது. **சேவியர்** - திருச்சி

★ முதல் சனி வழிபாடுகளுக்கு மக்கள் கொடுக்கும் நன்கொடைகளை பார்க்கும் போது நம்மையும் அதில் பங்குபெற தூண்டுகிறது.

**கிறிஸ்டோபர்** – சென்னை

★ திருக்கல்யாணத் தாயின், அற்புதங்கள்,சாட்சிகள்,அன்னையின் கருணைக்கு எல்லையே இல்லை என்பதை பறைசாற்றுகின்றது.

பத்ரகனி – காவல்கிணறு

★ முதல் சனி வழிபாட்டின் நிகழ்வுகள் அதில் கலந்து கொள்ள இயலாத எங்களைப் போன்றவர்க்கு அறிந்து ஆறுதல் அடைய எங்களுக்கு உதவியாக இருந்தது.

**சுதா** - மயிலாடுதுறை

★ அறிவோம் அன்னைை செய்தித் துளிகள் அனைத்தும் பொன்முத்துககள்

– **ஷீமா, ஷீபா,** கொக்கியபுரம்

★ அருட்தந்தை குமார் ராஜாவின் நிறைவான மனம் கட்டுரை நேர்மறை சிந்தனையை அனைவர்க்கும் வழங்க கூடிய ஒன்றாக அமைந்தது.

**ஜெயக்கொடி** - பொற்பை

★ ஆத்மாக்களின் தினம் கட்டுரை நாம் ஏன் ஆத்மாக்களுக்காக செபிக்க வேண்டும் என்பதை எடுத்து இயம்புவதாக உள்ளது.

**குழந்தை ராஜன்** – மதுரை

★ அன்னையின் அணிகலங்கள் கட்டுரை அன்னையின் புகழை பறைசாற்றுவதாக உள்ளது.

**சவரியப்பன்** - நாகர்கோவில்

★ கிறிஸ்து அரசர் நம்மை எந்த அளவுக்கு அன்பு செய்கிறார் அதற்கு எவ்வாறு நாம் கைம்மாறு செய்ய வேண்டும் என்பதை கிறிஸ்து அரசர் கட்டுரை நமக்கு தெளிவு படுத்துகிறது.

**பாத்திமா** – களியக்காவிளை

★ விவிலிய குறுக்கெழுத்து போட்டி நம்மை எல்லாம் விவிலியத்தை படிக்கத் தூண்டும் கருவியாக உள்ளது.

**ஆரோ அல்பினா** – கன்னியாகுமரி

# முதல் சனி வழிபாடு (3.11.2012)



திருக்கல்யாண மாதா திருத்தலத்தில்

நவம்பர் மாத முதல் சனி வழிபாட்டு நிகழ்வுகள் 03.11.2012 அன்று மிகச்சிறப்பாக நடைபெற்றது. காலை 9.30மணிக்கு ஜெபமாலையுடன் வழிபாடு ஆரம்பமாகியது. அதன்பிறகு அருட்திரு. பீட்டர் பால் அடிகளார், குணமளிக்கும் ஜெபவழிபாட்டு ஆராதனையை நடத்தினார்கள். அதைத் தொடர்ந்து ஆலயத்தை சுற்றி அன்னையின் சப்பரப்பவனி நடைபெற்றது. நவநாள் ஜெபம், மலையாள மொழியில் நவநாள் ஜெபம், விண்ணப்பங்கள் ஒப்புக்கொடுத்தல்,திருப்பலி கருத்துக்கள் ஒப்புக் கொடுத்தல் நடைபெற்றன. அருட்திரு. ஜாண்பால் அடிகளார், தலைமையில் பங்குத் தந்தை அருட்திரு. **பபியான் ஜோசப்,** அருட்திரு.**அந்தோனி,** அருட்திரு.**பங்கிராஸ்,** அருட்திரு. **பீட்டர் பால்**, அருட்திரு. **ஜெகதீஸ்**, அருட்திரு.**பீட்டர் ராஜா**. அருட்திரு.**செல்வஜார்ஜ்** அருடதிரு.**அமலதாஸ்**, அருட்திரு.**கிராசியஸ்**, அருட்திரு **பீட்டர் பாஸ்டியன்**, அருட்திரு.**சகாயராஜ்**. அருட்திரு.**போஸ்கோ,** திருத்தொண்டர் **பபிஸ்டன்** இணைந்து நவநாள் திருப்பலியை சிறப்பு செய்தார்கள்.

திருப்பலியில் அருட்திரு. **அந்தோணி** அடிகளார் மறையுரை ஆற்றினார்கள். திருப்பலி நிறைவு பெற்றவுடன் நோயாளிகளை மந்திரிக்கும் சடங்கு நடைபெற்றது. பல்வேறு இடங்களிலிருந்து **100** வாகனங்களுக்கு மேலாகவும் மற்றும் பேருந்துகள் வழியாகவும் சுமார் **10,000** க்கு மேற்பட்ட அன்னையின் பக்தர்கள் கலந்து கொண்டு அன்னையின் ஆசீரைப் பெற்றார்கள். வருகை தந்திருந்த அனைத்து மக்களுக்கும் காலையில் பொங்கல் அதன்பின் மதியம் வரை குளிர்பானம், மோர் அதனைத் தொடர்ந்து திருத்தலத்தின் சார்பாக மதிய உணவு வழங்கப்பட்டது.

அதன் பின் மாலை 4.00 மணிக்கு இறை இரக்கத்தின் ஜெப வழிபாடுகள் நடைபெற்றன. அதை அருட்திரு. **ஜெகதீஷ்** அடிகளார் வழி நடத்தினார்கள். அதன்பின்பு சிறப்பு நற்கருணை ஆசீர் நடைபெற்றது.

**– பங்குத்தந்தை**

# அக்டோபர் 2012– வரவு செலவு விபரம்

| | | |
|---|---|---|
| நிரந்தரவைப்பு நிதியில் ரூ. 3,00,000<br>வங்கியில் ரூ. 55,213<br>கையில் ரூ. 1127 | 356340.00 | |
| திருப்பலி வரவுகள்<br>முதல் சனி 516 X 70 = 36120<br>பங்கு இல்லம் 50 X 70 = 3500 | 39620.00 | |
| ஞாயிறு காணிக்கை<br>பொற்பை –7965 + கிளைப்பங்குகள் –1170 | 9135.00 | |
| மறைபரப்பு ஞஸயிறு காணிக்கை | 21883.00 | |
| திருமணம் | 525.00 | |
| அடக்கம் | 625.00 | |
| ஆலய உண்டியல்கள் மூலம் | 219420.00 | |
| பழைய வரிகள் முலம் வரவு | 5750.00 | |
| உடை விற்ற வரவு | 650.00 | |
| அடுப்புக் கறி விற்றது. | 700.00 | |
| பழைய தகரம் விற்றது | 255.00 | |
| முதல்சனி கடைகள் | 2780.00 | |
| பள்ளிகள் மூலம் வரவு | 5476.00 | |
| உபதேசியார் மூலம் ஏல வரவு | 9450.00 | |
| பயணிகள் தங்கும் அறை | 500.00 | |
| அசன மண்டப வாடகை முன் பணம் | 1000.00 | |
| **மொத்தம்** | 6,74,109.00 | |
| **செலவுகள்** | | |
| முதல்சனி அருட்தந்தையர்கள் படி | | 4250.00 |
| விவிலிய கண்காட்சி | | 1380.00 |
| வெல்டிங் வேலை (பெஞ்சு,டெஸ்க்,மறிப்பு) | | 80,000.00 |
| லாக்கர் இறக்கு கூலி,வண்டி வாடகை | | 4500.00 |
| ஜாண் வண்டி வாடகை | | 400.00 |
| மின் கட்டணம் பங்கு – 17824<br>மே.நி.பள்ளி – 4256 | | 22080 |
| இறைபணியாளர்கள் துணிகள் | | 3920.00 |
| மேக் டிவி விளம்பரம் | | 4000.00 |
| நோட்டீஸ் வினியோகம் செய்ய | | 500.00 |
| பயணம் செலவு | | 710.00 |
| மறைமாவட்ட அன்பியம் – சேர் வாடகை | | 300.00 |
| பூட்டுகள் பழுது பார்த்தது | | 1000.00 |
| பெயிண்டர் (முதல் சனி) | | 2160.00 |
| தொலைபேசி கட்டணம் – 2 | | 1044.00 |
| ஜாண்சன் வண்டி வாடகை | | 400.00 |
| தோட்ட வேலை கூலி | | 400.00 |
| எலக்டிரிக் சாமான்கள் – ஆலயம் | | 540.00 |
| எரிவாயு | | 450.00 |
| மறைபரப்பு ஞாயிறு காணிக்கை | | 21883.00 |
| விவிலிய ஞாயிறு காணிக்கை | | 2235.00 |

| | |
|---|---|
| இம்மானுவேல் வண்டி வாடகை + தண்ணீர் | 750.00 |
| மாதா கிரீடம் சரிசெய்ய (வெள்ளி வகையில்) | 4900.00 |
| பங்களா அருகல் தளம் போட (அசன சம்பந்தமாக) | 23799.00 |
| கதவு,கபோடு ஆசாரி வேலை (திருத்தலம் கடைக்காக) | 21235.00 |
| கோயிலில் சாரம் கட்ட | 2896.00 |
| டிஜிட்டல் போடு கட்டுவதற்கு (கம்பு,கயிறு,வாடகை+கூலி) | 2195.00 |
| கம்யூட்டர் சரிசெய்ய | 250.00 |
| ஆலய ஜெனரேட்டர்+வாசன டீசல் பெட்ரோல் | 10343.00 |
| செக்போஸ்ட் | 100.00 |
| சலவைத்தொழிலாளி | 480.00 |
| உதவித் தொகை | 1500.00 |
| பழங்கள் (மாதம் முழுவதும்) | 766.00 |
| ஸ்டேசனரி | 1518.00 |
| மருந்துகள் + மூக்கு கண்ணாடி | 1877.00 |
| தபால் செலவுகள் (மாத இதழ்) | 2450.00 |
| ஞானதூதன் சந்தா | 84.00 |
| செய்திதாள் | 113.00 |
| மளிகை சாமான்கள் | 3593.00 |
| மீன்,சிக்கன்,மட்டன்.காய்கறி | 970.00 |
| தண்ணீர் + பால் | 1580.00 |
| உபதேசியார் ஊதியம் | 4000.00 |
| சமையல் அம்மா ஊதியம் | 3000.00 |
| துப்புறவு பணியாளர்கள் ஊதியம் | 6000.00 |
| இரவுப் பணியாளர் ஊதியம் | 2000.00 |
| தொடக்கப் பள்ளி ஆசிரியை ஊதியம் | 2000.00 |
| அருட்சகோதரர் படி | 1000.00 |
| பங்குத் தந்தை படி | 6000.00 |
| பங்குத் தந்தை திருப்பலி | 1500.00 |
| புனித வரி<br>திருப்பலி 566 × 5 = 2830<br>திருப்பலி 536 × 50 = 26800<br>திருமணம் 1 × 8 = 8<br>அடக்கம் 1× 7 = 7 | 29645.00 |
| மொத்த செலவு | 2,88,696.00 |

| | |
|---|---|
| நிரந்தர வைப்பு நிதியில் | ரூ 300000.00 |
| வங்கியில் | ரூ.81703.00 |
| கையில் | ரூ 3710.00 |
| மொத்தம் | ரூ 385413.00 |

| | |
|---|---|
| மொத்த வரவு | ரூ. 674109.00 |
| மொத்த செலவு | ரூ. 2 88 6 9 6 .00 |
| இறுதியிருப்பு | ரூ. 385413.00 |

## 1.கிறிஸ்மஸ் குடில்

கி.பி.1223ஆம் ஆண்டிலே இத்தாலி நாட்டின் அசிசி நகருக்கு அருகிலிருக்கின்ற கிரேச்சியோவை அடுத்துள்ள காடுகளில் பிரான்சிஸ் என்ற ஒரு சாதாரண மனிதர். மெசியர் ஜோவான்னி வெலீட்டா என்பவரோடு சேர்ந்து கிறிஸ்து பிறப்பைக் கொண்டாட விரும்பினார். ஒரு நாள் பிரான்சிஸ்ஜோவான்னியை அழைத்து நாம் கிறிஸ்மஸ் கொண்டாட வேண்டுமென்றால்,பெத்லகேமை நம் மத்தியில் கொணடுவரவேண்டும் எனக்கூறினர். இருவரும் சேர்ந்து கிரேச்சியோ ஓட்டியக் காட்டுப்பகுதிகளில் கொண்டு வந்த பெத்லகேம் தான் இன்று நாம் உருவாக்குகின்ற குடிலின் ஆரம்பம்!.

எல்லா கரங்களிலும், வீடுகளிலும் தங்கள் வசதிக்கேற்ப இயேசுவின் பிறப்பைக் கொண்டாடி மகிழ்ந்த வேளையிலே, பிரானிசிஸ் காடுகளில் குடில் செய்து கிறிஸ்து பிறப்பபைக் கொண்டாடி மகிழ்ந்தார். யாரும் கிறிஸ்துவைக் கொண்டு போகாத இடங்களுக்கு நாம் கிறிஸ்துவை எடுத்துச்செல்லவேண்டும். என்பது பல இடங்களில் செய்யப்படுகின்ற குடில்களானது நமக்கு விடுக்கின்ற அழைப்பாகும். பல வேளைகளில் நாம் கோவில்களில் குடில் செய்வதோடும், வீடுகளில் அலங்கரிப்பதோடும் முடித்துக் கொள்கிறோம். ஆனால் குடில் சொல்லும் ஒரு முககியமான நற்செய்தி இயேசுவை வெறுப்பவர்களிடம் அவரைக்கொண்டு செல்வதும்,இயேசுவை அறியாதவர்களிடம் அவரை அறிவிப்பதும்,கிறிஸ்துவைக் தாண்டி நம்முடைய சகோதர மதத்தினரிடம் அவருடைய பிறப்பின் மேன்மையை எடுத்துரைப்பதும் காலத்தின் தேவையாகும்

பாத்திமா –பொற்பை.

## 2.கிறிஸ்மஸ் தாத்தா

கிறிஸ்து பிறப்பை பலருக்கு ஞாபகப்படுத்துவதே கிறிஸ்மஸ் தாத்தாதான்! கிறிஸ்து பிறப்பு விழாவையொட்டிய அடையாளங்களுள் எல்லோரையும் மெயசிலிர்க்க வைக்கும் அடையாளம் ஒன்று உண்டெனறால் அது தாத்தாதான்! இந்த தாத்தாவிடமிருந்து வாழ்க்கைக்கு என்ன கற்றுக் கொள்வது சாக்லேட்டோடு சேர்த்து ஏதாவது சொல்வரா! எல்லா தாத்தாக்களுக்கும் பெயர் இருப்பதைப் போல் இவருக்கும் ஒரு பெயருண்டு. அதுதான் சாந்தாகிளாஸ்.இவர் ஆயராக இருக்கின்றபோது யாருக்கும் தெரியாமல் ஏழைகளின் வீட்டு முற்றங்களில் இனிப்புகள்,ஆடைகள், விளையாட்டுப்பொருள்கள் கொண்டு போய் வைத்துவிட்டு வந்துவிடுவார். அதைப்பார்க்கின்ற ஏழைகள் இயேசுவே தங்களுககு கிறிஸ்மஸ் பரிசு கொடுத்திருப்பதாக மகிழ்ச்சியோடு ஏற்றுக்கொள்வார்கள்

எனக்கு என் வீட்டிற்கு,என் பிள்ளைகளுக்கு, என் சொந்தத்திற்கு எனற குறுகிய வட்டத்திற்குள் வாழ்ந்து கொண்டிருக்கும் நம் எல்லோருக்கும் தாத்தா தருகின்ற அழைப்பு உங்கள் கடைசித்தெருவில் வாழ்கின்ற ஏழைப்பாட்டியைக் கொஞ்சம் நினைக்கவேண்டும் என்பது தான்! இரண்டு ஜோடி, மூன்று ஜோடி ஆடை வாங்கி மகிழ்கிற நமக்கு தாத்தா சொல்வதெல்லாம் தம்பி ஓரே ஆடையை துவைத்து துவைத்து உடுத்துகின்ற உங்க எதிர் வீட்டுத் தங்கச்சிய கொஞ்சம் நினைச்சு பாருப்பா என்பது தான்! பகிர்ந்து உண்ணுகிற பக்குவப்பட்ட உள்ளங்களில் தான் பாலன் இயேசு குடியிருக்கிறார்

ஜெரோஸ்– பொற்பை

## 3.கிறிஸ்மஸ் கேரல்ஸ்!

வானதூதர்கள் பாடிய பாடல்களை எல்லாம் பாடித்துதித்து வீதியெங்கும் நம்பிக்கையின் கலங்கரை விளக்கங்களாய் கம்பீரமாய் நிற்க அழைப்பு விடுப்பதே இந்த கேரல்ஸ். இன்னும் பலருக்கு எனக்கு பிடித்த வீடு, பிடிக்காத வீடு,சொந்தக்காரர்,சண்டைக்காரர்,அந்தப்பகுதி, இந்தப்பகுதி என்றெல்லாம் பாகுபாடு. சமாதானத்தைக் கொடுக்கின்றபொழுது அது இரட்டிப்பாக மாறுகிறதல்லவா விட்டுக்கொடுப்பார் கெட்டுப்போவதில்லை எல்லோரையும் சந்திப்போம் அனைவரையும் மகிழ்ச்சியால் நிரப்புவோம்

அஜெய் – பொற்பை

## 4.கிறிஸ்மஸ் மரம்

கிறிஸ்மஸ் மரம் என்பதற்கு பசுமை மாறாத மரம் என்று பொருள். முடிவற்ற வாழ்வுக்கு அடையாளமாக பசுமை மாறாத மரங்கள்,மலர் வளையங்கள்மற்றும் மாலைகளை வைக்கும் வழக்கம் பழங்கால எகிப்தியர்கள்,சீனர்கள் மற்றும் யூதர்கள் மத்தியில் இருந்திருக்கிறதாம். ஏவாள் பற்றி ஜெர்மனிய இடைக்கால நாடகத்தில் ஆப்பிள்கள் தொங்கும் பசுமையான ஏதேன் தோட்டத்தில் இருந்ததாகக் காட்சிப்படுத்தினர். இது வாழ்வின் மரமாக அடையாளப்படுத்தப்பட்டது.

மரத்தில் கனி கட்டும் வழக்கம் 13- ஆம் நூற்றாண்டு காவியங்களில் பார்க்கக் கிடைக்கிறது.ஒப்பனைச் செய்யப்பட்ட கிறிஸ்மஸ் மரம் ஜெர்மனிய லூதரன்களிடம் பரவலாகக் காணப்பட்டது. 17 ஆம் நூற்றாண்டில் ஜெர்மன் இளவரசர் சாக்ஸ்கோபர்க் என்பவரால் கிறிஸ்மஸ் மரம் 19-ஆம் நூற்றாண்டின் இங்கிலாந்தில் மக்களிடம் பரவலாக அறிமுகப்படுத்தப்பட்டது.

சுஸ்மி – பொற்பை

### வையத்தில் வாழ்வாங்கு வாழ

1.செய்யக்கூடாதது – உபத்திரம்
2.செய்யவேண்டியது – உதவி
3.தவிர்க்கவேண்டியது – விவாதம்
4.உயர்வுக்கு வழி – உழைப்பு
5.நழுவக்கூடாதது – வாய்ப்பு
6.மிக்பெரிய வெகுமதி – மன்னிப்பு
7.மிகவும் வேண்டாதது – வெறுப்பு
8.மிகப்பெரிய தேவை – விழிப்புணர்வு
9.மிகக் கொடிய நோய் – பேராசை
10.மிகவும் சுலபமானது–குற்றம் காணல்
11.மிகவும் கீழ்த்தரமானது – பொறாமை
12.நம்பக்கூடாதது – வதந்தி
13.ஆபத்தை விளைவிப்பது – அதிக பேச்சு
14.பின்பற்ற வேண்டியது – பத்துக்கட்டளைகள்
15.மிகவும் நலல நாள் – இன்று

**ஜெரோமினா– காவை**

### பத்து மனமே பத்து

தேடிய ஆடு ஒன்று
மாதிரி வீடுகள் இரண்டு
வென்ற சோதனைகள் மூன்று
நறசெய்தி நூல்கள் நான்கு
சிறுவன் தந்த அப்பளங்கள் ஐந்து
கானாவூர் கற்சாடிகள் ஆறு
அருட்சாதனங்கள் ஏழு
கிடைத்தற்கரிய பேறுகள் எட்டு
ஆவியின் கனிகள் ஒன்பது
ஆண்டவன் கட்டளை பத்து

**சேவியர் – காவை**

### பதிவுகள்

1.வாதங்கள் வழக்குகளை வெல்லும்,
ஆனால் நண்பர்களை இழக்கும் **– வில்லியம் வேட்ஸ் வொர்த்**

2.சரியான முடிவுகளையும்,தாமதமாக எடுத்தால் தவறாகவே முடியும்
**– காரல் மார்கஸ்**

3.மற்றவர்களை எடை போடுவதில் காலத்தைச் செலவழிக்காதீர்கள்!
ஏனெனில் அவர்களை நேசிக்க நேரமில்லாமல் போகும்.

4.வாங்கும் கடனும் தேங்கும் பணமும் வளர வளர வாழ்வைக் கெடுக்கும்
**– வேதாந்திர மகரிஷி**

5.மெதுவாக நடப்பவன் நான்.....ஆனால் ஒரு போதும் பின் வாங்கியதில்லை.
**– ஆபிரகாம்லிங்கன்**

6.வெற்றி எல்லோருக்கும் கிடைப்பதில்லை. வெற்றி பெறக்கூடிய தகுதி
எல்லோருக்கும் உண்டு **– டாக்டர் அப்துல் கலாம்**

**ஆல்பர்ட்–மதுரை**

# ஹெல்த் கார்னர்



## நீரிழிவைக் கட்டுப்படுத்தும் வெண்டைக்காய்.

உலகளவில் மனிதர்களை அச்சுறுத்தும் நோய்களில் ஒன்று நீரிழிவு. உலக அளவில் இந்தியாவில் தான் அதிகபேர் இந்நோயால் பாதிக்கப்பட்டுள்ளனர். இந்தியாவில் சுமார் 5கோடிப்பேருக்கு நீரிழிவு நோய் உள்ளது. இந்நோயை முழுமையாக நிவிர்த்தி செய்ய முடியாவிட்டாலும்,கட்டுப்படுத்த முடியும். இதற்கான பல வழிமுறைகளை இயற்கையே நமக்கு கற்றுத் தருகிறது.வெண்டைககாய் நீரிழிவு நோயைக் கட்டுப்படுத்துவதில் சிறந்து விளங்குகிறது. நீரிழிவு நோய் உள்ளவர்கள் உணவு பழக்க வழக்கத்தில் கட்டுப்பாட்டோடு இருக்க வேண்டும். குறைந்த அளவு கார்போ ஹைட்ரேட் உள்ள உணவுகளைத்தான் இவர்கள் அதிகம் உண்ணுவர்,

வெண்டைக்காயில் குறைந்த அளவே கிளிசரி உள்ளதால், இது நீரிழிவு நோயாளிக்கு மிகுந்த உதவியாக இருக்கிறது. அதுமட்டுமின்றி ரத்தத்தில் உள்ள சர்க்கரையின் அளவையும் கட்டுபடுத்துகிறது. உயர் ரத்த அழுத்தம் மற்றும் சர்க்கரையின் அளவு அதிகரிப்பு,சிறுநீரைப் பாதிக்கக் கூடியது. ஆனால் வெண்டைக்காய் ரத்த சர்க்கரையைக் கட்டுப்படுத்துவதால்,சிறுநீர் நோய்களை தடுக்கிறது. அதிலும் சமைத்த வெண்டைக்காயை விட சமைக்கப்படாத வெண்டைக்காய் தான் நீரிழிவை கட்டுப்படுத்துவதில் சிறந்து விளங்குகிறது. இதிலுள்ள பைபர் சத்தானது ஜீரணத்தைக் கட்டுப்படுத்தும் ஆற்றல்பெற்றது. நீரிழிவு நோய் உள்ளவர்கள் மருத்துவத்தோடு இயற்கையையும் நம்பினால் நோயின் கடுமையிலிருந்து நம்மைக் காத்துக் கொள்ளமுடியும்

## டெங்குகளின் அறிகுறிகள்

அதிக அளவுக்கு (103 டிகிரிக்கு மேல்) காய்ச்சல் கடும் தலைவலி, கண்வலி, குமட்டல், உடல்வலி, மூட்டு இணைப்புகளில் வலி ஆகியவை டெங்கு காய்ச்சலின் அறிகுறிகள் என்று மருத்துவர்கள் தெரிவித்தனர்.

**நன்றி – நந்தவனம் நாதம்**

### வாழ்க்கை கணக்கு

நற்செயல்களை கூட்டிக்கொள்
தீயவற்றை கழித்துக்கொள்
அறிவை பெருக்கிக் கொள்
நேரத்தை வகுத்துக்கொள்
இன்ப, துன்பங்களை சமமாக்கிகொள்
அன்பை பெருக்கி ஆணவத்தை
குறைத்துவிடு.

**டே.ஜோஸ்பின், பொற்பை**

### சிறந்தவை

சிறந்த பதில் – மவுனம்
சிறந்த தண்டனை – மன்னித்தல்
சிறந்த ஒழுக்கம் – மனச்சுத்தம்
சிறந்த உண்மை – மறைக்காது பேசுவது
சிறந்த ஆறுதல் – மனம்விட்டு பேசுவது
சிறந்த குணம் – மனித நேயம்

**சித்ரா, பொற்பை**



# கிச்சன் கார்னர்

## மல்லூர் மீன் ப்ரை

துண்டு மீன்கள் ருசி வகையில் தனி ரகம். மல்லூரி மீன் ப்ரை அதில் இன்னும் ஸ்பெஷல் ரகம். தயாரித்து சுவைக்கலாமா.

### தேவையான பொருட்கள்:

மீன் - 1/4 கிலோ, காய்ந்த மிளகாய் - ஒரு கைப்பிடி அளவு, சாம்பார் வெங்காயம்-கைப்பிடியளவு,உரித்த பூண்டு-ஒரு கைப்பிடியளவு, தனியா தூள் - 2 டீஸ்பூன், கறிவேப்பிலை - சிறிதளவு, உப்பு, எண்ணெய் - தேவைக்கேற்ப, மிளகுத்தூள் -1/2 டீஸ்பூன்

### செய்முறை

மீனை சுத்தம் செய்து முள் நீக்கி சிறு சதுரங்களாக வெட்டிக் கொள்ளவும். ஒரு கடாயில் எண்ணெய் ஊற்றி காய்ந்ததும், கறிவேப்பிலை போட்டுத் தாளிக்கவும். இப்போது காய்ந்த மிளகாய், வெங்காயம், பூண்டு ஆகியவற்றை ஒன்றன்பின் ஒன்றாகச் சேர்க்கவும்.

பின்பு தனியாத்தூள், மிளகுத்தூள் தேவையான உப்பு சேர்த்து சிறிது நீர் ஊற்றிக் கொதிக்க விடவும். பூணடு,வெங்காயம் வெந்த பிறகு மீனையும் சேர்க்கவும்.ஏனைய பொருட்களுடன் மீன் வெந்து நன்கு டிரை ஆனதும் அடுப்பை அணைக்கவும் இப்போது மல்லூர் மீன் ப்ரை ரெடி.

- நன்றி குடும்

## ஒருவரி உண்மைகள்

- சூரியனுக்கு அருகிலுள்ள கிரகம் மெர்க்குரி
- வடதுருவத்தில் நிலப்பரப்பே கிடையாது.
- சென்னை மாநகராட்சி தோன்றியது 29.09.1688
- கவர்னர் பதவி வகித்த முதல் இந்தியர் லார்டு சின்ஹா
- அன்னாசிப் பழத்துக்கு விதையே கிடையாது.
- மூங்கில் ஒரு நாளில் மூன்றடி கூட வளரும்
- சந்திரனின் மறுபுறத்தை முதலில் படம் பிடித்தது லூனா 3.
- இந்தியாவில் மணியார்டர் சேவை 1880-ல் வந்தது.
- ராஷ்டிரபதி பவன் 330 ஏக்கர் பரப்பில்
- வடதுருவத்தை 1909-ல் அடைந்தவர் அட்மிரப்பியரி

பென்சி - கட

# திருக்குடும்பம்

திருக்குடும்பம் என்றதும் இயேசு,அன்னைமரியாள்,புனித சூசையப்பர் இவர்கள் மூவரும்தான் நம் நினைவுக்கு வருவார்கள்.

குடும்பத்தலைவராகிய புனித சூசையப்பர் தெய்வப்பயம், நீதி, நேர்மை, நிறைந்த பண்பாளர்.கடின உழைப்பாளி.கடவுளின் புனிதர் அறவித்தப்படி அவர் மரியாளை ஏற்றுக்கொண்டபின் மரியாளுக்கு ஒரு சிறந்த பாதுகாவலராகவே இருக்கிறார். சட்டத்தை மதித்துப் பெயரைப் பதிவு செய்வதிலும்,ஏரோதிடமிருந்து குழந்தை இயேசுவைப் பாதுகாப்பதிலும்,பொறுப்புடனும் விகேத்துடனும் செயல்படுகிறார். இயேசுவின் வளர்ப்புத் தந்தையாக வாழ்கிறார்.

அன்னை மரியாள் தன் மகன் மாளிகையிலே பிறக்காமல், மாட்டுக்கொட்டிலில் பிறந்ததை மகிழ்வோடு ஏற்றுக்கொள்கிறாள். திருச்சட்டத்தின்படி இயேசுவை ஒப்புக்கொடுப்பதிலும், காணாமல்போன இயேசுவைத் தேடிக்கண்டுபிடிப்பதிலும் ஒரு பொறுப்புள்ள பெண்ணாக செயல்படுகிறாள், உதவி தேவைப்படும் எலிசபெத்தமாளுக்கு ஓடிச்சென்று பணிவடை புரிவதிலும், கானாவூர் திருமணவீட்டில் இயேசுவிடம் புரிந்து பேசுவதிலும் பிறர்நலம் மீது அக்கறை கொண்டவர்களாகவும்,இயேசுவின் முதல் புதுமைக்குத் தூண்டுதலாகவும் இருக்கிறாள். கடவுளின் திட்டத்தை நிறைவேற தன் மகனுடன் கல்வாரி வரை துணை நிற்கிறாள். இறுதிவரை கலங்காமல் ஒரு வீரத்தாயாக சிலுவையின் அடியில் நிற்கிறாள்.

இயேசு தச்சுத்தொழிலில் தன் வளர்ப்புத் தந்தைக்கு உதவிசெய்கிறார். அன்னை மரியாளின் சொல்லுக்கு மதிப்பளிக்கிறார். (கானாவூர் திருமணம்) தந்தையின் திட்டம் நிறைவேற இறுதிவரை கீழப்படிந்து நடக்கிறார். தன் அன்னையை நமக்குத் திருக்கல்யாண அன்னையாகத் தந்து சிலுவையில் பலியாகி சாவை வென்ற வீரராக உயிர்த்தெழுந்தார்.

கடவுளின் திட்டம் நிறைவேற இம்மூவரும் ஒன்றுபட்ட உள்ளத்தோடு இறுதிவரை கடவுளில் நிலைத்திருந்தாலேயே திருக்குடும்பமாகத் திகழ்கிறார்கள்

**S.மேரி லீலா.**
பொற்பை

## பொது அறிவு

- உலகத்தின் மிகப்பெரிய ஏரி?
  காஸ்பியன் கடல்
- எந்த அமிலத்திலும் கரையாத உலோகம் எது?
  பிளாட்டினம்
- மிகவும் சுத்தமான நீர் எது?
  மழை நீர்
- இரும்பு எந்த திரவத்தில் மிதக்கும்?
  பாதரசம்
- விசையின் அலகு எனன?
  நியுட்டன்

**ஞானசுஜித் – காவை**

# விக்ரம் சாராபாய்

1919 ஆம் வருடம் பிறந்த இவர் நாட்டின் சிறந்த விஞ்ஞானியாவார். கேம்பிரிட்ஜில் விஞ்ஞான கல்வி கற்றவர். பெங்களூர் இந்திய விஞ்ஞானக் கழகத்தில், டாக்டர் சி.வி.ராமன் கீழ்,காஸ்மிக் கதிர்கள் குறித்து ஆராய்ச்சி நடத்தினார். பிறகு பௌதிக ஆராய்ச்சிக் கூடத்தில் பணியாற்றினார். தும்பாலில் முதல் ராக்கட் செலுத்தும் நிலையத்தை அமைத்தது இவரது முக்கிய சாதனைகளில் ஒன்றாகும். விண்வெளி ஆராய்ச்சிக்கான இந்தியக் குழுவின் முதல் தலைவராக இருந்தவர். ஆமதாபாத்தில் பரீட்சார்ந்த துணைக்கோள் தொடர்பு நிலையத்தை ஏற்படுத்தினார். அணு சக்திக் கமிஷன் தலைவராகவும், இந்திய அரசின் அணுசக்திக் துறை செயலராகவும் அரும்பணி ஆற்றியிருக்கிறார்.

**செல்வசுதாகர் –**

## செப்டம்பர் மாத குறுக்கெழுத்து போட்டியின் சரியான விடைகள்

**இடமிருந்துவலம் :** 1 .பெத்துவேல் 5.கோதுமை 9.கர்ச்சனை 13. சமாரியா 17.சாம்பல் 21.தேரிலே


**வலமிருந்து இடம்** : 2.எண்ணெய் 6. இறைவாக்கு 10.கார்மேல் 14.அமட்சியா 18.மலைகள் 22.நீதி

**மேலிருந்து கீழ்** : 3.மகிழ்ச்சி 7.கதிரவன் 11.அசாயேல் 15.மண்ணுலகம் 19.எருசலேம் 23.சீமோன்

**கீழிலிருந்து மேல்** : 4.விதைகள் 8.கொடுமைக்கு 12.எமோரியர் 16.கடற்பாசி 20.கற்குவியல் 24.கொம்பு

## கடந்த மாத குறுக்கெழுத்து போட்டியில் வெற்றி பெற்று பாராட்டுப்பெறுபவர்கள்

1. **D.ஜோஸ்பின் மேரிதாசன்** கவரப்பேட்டை
2. **டோம்னிக் பெனிட்டா** கவரப்பேட்டை
3. **J.சேசுதுரை ஜென்ஸி** கவரப்பேட்டை
4. **J. ஏசுவடியான் சுமதி** கவரப்பேட்டை
5. **கபிரியேல் மேரி** பொற்பை
6. **G. ரெஜினாள் மேரி** பொற்பை
7. **குயின்ரோஸ் பாக்கியம்** பொற்பை
8. **A. சேவியர் தேன்மலர்** பொற்பை
9. **S.லூர்து ரெக்ஸ்,** பொற்பை
10. **S.M.V,ராஜா, கொழுந்தட்டு**
11. **S. மேரி லீலா,** பொற்பை
12. **J.ஜெபி ஜோஸ்**.கடகுளம்
13. **M.டேவிட் லியோன்,**பொற்பை
14. **அ.மரிய மெர்லின்,** அடைக்கலாபுரம்
15. **S.ஜோஸ் பிரகாஸ்,**பொள்ளாச்சி
16. **டேவிட் தேவராஜன்,**வெள்ளக்கோவில்
17. **சந்தனதிரவியம்** பொற்பை
18. **M.ஆகாஷ் துரை,**வெள்ளக்கோவில்
19. **நிவேதாசுமன் ராயன்** வீரபாண்டியன்பட்டணம்
20. **பாஸ்டினா** வீரபாண்டியன்பட்டணம்
21. **லெவிற்றா** வீரபாண்டிணபட்டணம்.



# வாழ்க்கை

வாழ்க்கை என்பது

| | | |
|---|---|---|
| ஒரு சந்தர்ப்பம் | – | நழுவவிடாதருங்கள் |
| ஒரு கடமை | – | நிறைவேற்றுங்கள் |
| ஒரு இலட்சியம் | – | சாதியுங்கள் |
| ஒரு சோகம் | – | தாங்கிக்கொள்ளுங்கள் |
| ஒரு போராட்டம் | – | வென்று காட்டுங்கள் |
| ஒரு பயணம் | – | நடத்தி முடியுங்கள் |

- வாழ்க்கை என்பது ஒரு போர்க்களம்
- நம்பிக்கை தான் ஆயுதம்
- வாழ்க்கை வாழ்வதற்கே
- வாழ்வதற்காக உண்; உண்பதற்காக வாழாதே
- வாழ்க்கை ஒரு மலர் படுக்கை அது முட்களால் ஆனது.
- வாழ்க்கை என்கிற ஆடையில் நன்மை,தீமை என்ற இரு நூல்கள் இருக்கும்.
- வாழ்க்கை பரிவோதிப்பதற்காக இல்லை,சாதிப்பதற்காக
- வாழ்க்கையில் முன்னேற வேண்டுமானால் உன்னுடைய கால்களால் நடந்து போ,ஏனையோரின் முதுகின்மேல் ஏறிப்போக விரும்பாதே. அது உனக்கு ஆபத்து.
- வாழ்க்கையில் ஏழ முறை விழுந்ததை நினைப்பதைவிட 8-ம் முறையாக எழுந்ததைக் கண்டு மகிச்சிக்கொள்.
- இளையோரே,உங்கள் எண்ணங்களை மாற்றுங்கள்.உங்கள் வாழ்க்கையை மாற்றிவிடுவீர்கள்.
- வாழ்வை விரும்புகிறாயா நேரத்தை இழக்காதே.நேரத்தால்தான் வாழ்வு கட்டப்படுகிறது
- வாழ்க்கைஎன்பது துணிச்சல் நிறைந்த விடாமுயற்சி என்றுதான் பொருள்.
- வாழ்க்கையின் இனிமையான பருவம் இளமை,ஆனால் நாம் இதனை முதுமையில் தான் உணருகிறோம்.

சாந்திதுரை–காவை

# சிந்தனை துளிகள்

இன்ப சிரிப்பே இல்லத்தின் ஒளி
வெல்லமுடியாத போராட்டத்தை தொடங்காதே
பிரச்சினைக்கு தீர்வு அதை எதிர் கொள்வது.
வாதாட பலருக்கு தெரியும்.உரையாட ஒரு சிலருக்கே தெரியும்
சுலபமானது எது சரியென்று அறிவது,கடினமானது அதை செய்வது.

– டே. நிஜிதா, வெள்ளக்கோயில்

# புனித பிரான்சிஸ் சவேரியார் (1506 – 1552)

இந்தியாவின் அப்போஸ்தலர் என்று அழைக்கப்படும் அவர் ஸ்பெயின் நாட்டில் நவார் மாகாணத்தில் சேவியர் அரண்மனையில் 1506-ஆம் ஆண்டில் பிறந்தார். இவர் உயர்ந்த குலத்தைச் சேர்ந்தவர். 18-ஆம் வயதில் கல்வி கற்க பாரிஸ் நகருக்குச் சென்றார். நான்கு ஆண்டுகளுக்கு பின் புனித லொயோலா இஞ்ஞாசியார் அந்நகருக்கு வந்து, பிரானிசிஸ் தங்கி இருந்த புனித பார்பரம்மாள் கல்லூரியில் தங்கினார். அந்த சமயத்தில் பிரான்சிஸ் உலக மகிமை பேர் கீர்த்தியைத் தேடி வந்தார். இஞ்ஞாசியாருடன் சேர்ந்ததால் முற்றிலும் மனம்மாறி அவருடைய சீடரானார்.

1536-ஆம் ஆண்டில் இஞ்ஞாசியாருடைய முதல் தோழர்களோடு வெனிஸ் நகருக்குச் சென்று உரோமையை சந்தித்த பிறகு வெனிஸ் நகரில் 1537-ஆம் ஆண்டில் இவர் குருப்பட்டம் பெற்றார். இயேசு சபையின் முதல்உறுப்பினரான இவர்கள் போப்பானவரது பிரதிநிதியின் முன்னிலையில் முதல் வார்த்தை பாடு களைக் கொடுத்தார்கள். இயேசு சபை ஸ்தாபிக்கப்பட்ட சற்று பின் பிரான்சிஸ்,போர்த்துகல் நாட்டுக்கு அனுப்பபட்டு 1541-ல் இந்தியாவுக்கு புறப்பட்டார். அடுத்த ஆண்டு கோவாவில் இறங்கினார்.இந்தப் பட்டணத்தை தமது உழைப்பாலும், செபத்தாலும், தவத்தாலும் முற்றிலும் சீர்படுத்தினார். கோவா நகரில் அவிசுவாசிகளை இவர் மனந்திரும்பினார். தெருக்கள் வழியாக ஒரு சிறு மணியை அடித்துக்கொண்டு போவார். சிறுவர்களைத் தம்மிடம் அழைப்பார். அவர்கள் வந்து அவரைச் சூழ்ந்து கொள்வார்கள். நமது திருவேதத்தை பற்றி அவர்களுக்குப் போதிப்பார். செபங்களும், பாட்டுக்களும் அவர்களுக்குக் கற்பிப்பார். சிறுவர்கள் வீட்டிற்குப்போய், தம் பெற்றோரை வற்புறுத்தி அழைப்பார்கள். பெற்றோர் வந்தனர். கிறிஸ்தவர் ஆயினர். தென் இந்தியா, இலங்கை,மொலக்காய், ஜப்பான் முதலிய நாடுகளில் வேதம் போதித்தார். கடவுளை மக்கள் அறியாத ஓர் இடம் பூமியில் இருக்கிறது என்று நான் அறிவேனானால் நான் ஒரு போதும் இளைப்பாறமுடியாது. என்று இவர் அடிக்கடி சொல்வார். ஜப்பானில் வேதம் போதித்த பின் சீனாவுக்குப் போக வேண்டும். அங்கு மக்களை, பாவிகளை மனந்திருப்ப வேண்டும் என்று அவர் திட்டமிட்டிருந்தார். இலட்சம் மைல் தூரம் வெறுங்காலுடன் நடந்து சென்று ஏறக்குறைய நூறு ஊர்களிலும், தீவுகளிலும் வேதம் போதித்து அநேக இலட்சம் மக்களை மெய்யங் கடவுளிடம் கொண்டு வந்தார். சீனாவுக்கு புறப்பட்டுப் போகும் பொழுது சான்சியன் தீவில் 2-12-1552ல் இவர் உயிர் துறந்தார். இவருடன் அருகில் இருந்த வெள்ளையர்கள் இவருடைய வேலைக்காரரில் ஒருவன் இவரைக் கைவிட்டான். தம் தேவ எஜமான் இயேசுவைப் போல எல்லோராலும் கைவிடப்படடவராய் உயிர் நீத்தார்.

### ***சிந்தனை:-***

கடவுளை மக்கள் அறியாத ஓர் இடம் பூமியில் இருக்கிறது. என்று நான் அறிவேனானால் நான் ஒருபோதும் இளைப்பாறமுடியாது. என்று இவர் அடிக்கடி சொல்வார். நமது ஆர்வத்தை இவரது ஆர்வத்துடன் ஒப்பிட்டுப் பார்ப்போம்.

### செபம்:-

புனித சவரியாரே, ஆர்வம் நிறைந்த ஆயர்களையும் குருக்களையும் திருச்சபைக்கு நிரம்பத் தாரும்.

**நன்றி – தூயவர்களின் வரலாறு**

# திருமண வாழ்த்து



## சூசை அமல்ராஜ்
## லென்சியா

திருமண நாள் : 25.10.2012

## என்றும் வாழ்த்தும் அன்பு உள்ளங்கள்...

**ரவீஸ்டர்– சுமதி**
**கபிரியேல் ஜெயசீலன் – பொன்மேரி**
**அன்றோனி ஆரிலியன்ஸ் – ரோஸ்லின்**
**செல்வி – ராஜா ஜாண் ஜுடு**
**பாஸ்கர் ராஜா**

**குட்டீஸ்**

**மார்க்ரெட் கிரேனா,**
**மரினஸ் ஜெமினா**
**ஜெய்சன், ஜெஸிந்தா,**
**ஜெரிஸ், ழுவைனா**

மற்றும் உற்றார் உறவினர்கள் நண்பர்கள்...

# வரவேற்கிறோம்

**இறை ஆசீராய் எம் இல்லங்களில் பிறந்து பொற்பை திருச்சபையை அலங்கரிக்கும் அன்பு மலர்களே உங்களை பாசமுத்தத்துடன் வரவேற்கிறோம்.**

| | | | |
|---|---|---|---|
| 1. ஜெப்ரி ஜோசப் | 03.05.12 | ஜெரால்டு ஜாய்சன்<br>ஜூடு ஜெனிபர் | பொற்பை |

# வாழ்த்துகிறோம்

| எண் | மணநாள் | மணமக்கள் | ஊர் |
|---|---|---|---|
| **1** | **15.11.12** | **ராஜேஷ்<br>மேரி பிரின்ஸி** | **பொற்பை** |



# பாராட்டுகிறோம்

சாத்தான்குளம் மறைமாவட்ட அளவில் இளம் மாணாக்கர் இயக்கம் சார்பில் கலைப்போட்டிகள் 31.10.2012 அன்று சாத்தான்குளம் அன்னை தெரசா திருமண மண்டபத்தில் நடைபெற்றது. அதில் கலந்து கொண்ட நமது ஊர் புனித மரியன்னை மேல்நிலைப்பள்ளி மாணவி M.**யூதித் சகாய ஷில்பா** (XI.A) கட்டுரைப்போட்டியில் முதல் பரிசுபெற்றாள். அவரை பள்ளித் தாளாளர் தந்தை தலைமை ஆசிரியை, மற்றும் ஆசிரியர்கள் பாராட்டினார்கள்.

**திருமதி.மரிய அருள் விஜி ஆசிரியை**
**திருமதி.மெர்சல்ன் ஆசிரியை**

# இதய அஞ்சலி

| | | |
|---|---|---|
| **1.புஸ்பம் அம்மாள்** | **பொற்பை** | **07.11.12** |
| **2.இருதயதாசன்** | **பொற்பை** | **17.11.12** |
| **3.தெரஸ்** | **பொற்பை** | **18.11.12** |

# புனித மரியாயே

அன்னை மரியாவைப் பல முறைகளில், பல வழிகளில் அழைத்து அவரைக் குறித்து மகிழ்ச்சி அடைகிறது நம் உள்ளம் மரியாளின் மன்றாட்டு மாலையில் அன்னையை 'புனித மரியாயே' என அழைப்பது ஏன்? என்பதே நம் தேடலின் மையம். 'தேடுங்கள் கண்டடைவீர்கள்' (மத:7.7) என்ற இறைமகன் இயேசுவின் வார்த்தைகளில் எள்ளவுகூட சந்தேகமில்லாமல் தேடலின பயணத்தை நம்பிக்கையோடு தொடங்கியிருக்கிறோம். கண்டடைவோம் என்று விசுவாசத்தோடு.

## வெறும் அடைமொழியா?

தமிழ் மொழியின் சிறப்புக் கூறுகளுள் அடை மொழியும் ஒன்று. அடைமொழி என்பது ஒரு மனிதர், இடம், சூழல் ஆகியவற்றைக் சிறப்பித்துக் கூறுவதாகும். மேற்குறிப்பிட்ட வாக்கியத்தின் உள்ளொளியில் பார்த்தோமமேயானால் நாம் தியானித்துக் கொண்டிருக்கிற 'புனித மரியாயே' என்ற சொற்களிலுள்ள ஓலிப்பும் கூட ஒருவகையில் அடைமொழியாய் மட்டும் கருதப்பட வாய்ப்பிருக்கிறது. ஆனால் இச்சொற்கள் உணர்த்தும் உண்மை இன்னும் உயர்வானது.உன்னதமானது என்றால் பொய்யல்ல

'புனித' என்ற சொல் இலவசமாக வழங்கப்பட்ட ஒன்றல்ல, மாறாக மறைசாட்சியர்களின் இரத்தத்திற்கு அளிக்கப்பட்ட மதிப்பை இறை விருப்பத்தைக் தங்களுடைய விருப்பமாய்க் கொண்டு வாழ்ந்தவர்களுக்கு வழங்கப்பட்ட வணக்க இறைசாயலையும் பாவனையையும் கொண்ட மனிதத்தை முழுமையாய் வாழத் தங்களுக்குள்ளே முயற்சி செய்தவர்களுக்காகத் தரப்பட்ட முகவரி. இறைவாக்கின் பொருளுணர்ந்து தம் இதயம் மாற்றியது மட்டுமல்லாது பிறருடைய இதயங்களையும் மாற்றுவதில் முனைப்போடு செயல்பட்டவர்களுக்குக் கீரிடமாய்ச் சூட்டப்பட்ட முடி.ஆகவே மரியாவைப் 'புனித மரியாயே' என அழைப்பது வெறும் அடைமொழி மட்டுமல்ல, மாறாக அவர் வாழ்ந்த வாழ்வுக்கான பரிசு. மரியாளுக்கு மணிமுடி.

மண்ணகம் அல்ல, விண்ணகமே நம் இலக்கு என்று செயல்பட்டு மண்ணில் மடிந்து விண்ணில் விருட்சமாய் பரந்து நின்றவர்களை மாட்சிப்படுத்தும் வகையில் திருச்சபை சூடும் பொன் மகுடமே இந்த 'புனித' என்ற விளிப்புச் சொல். இந்த சொல் இன்னும் பல்வேறு விதங்களிலும் அழைக்கப்படுகிறது. அதாவது பரிசுத்த 'அர்ச்சிஸ்ட்' ' தூய' எனப் பல பெயர்களைக்கொண்டு அழைக்கப்படுவது நாம் அறிந்த நடைமுறை உண்மை.

'ஐயா, தர்மப் பிரபு! என கஞ்சத்தனமாய் வாழ்பவர்களை இந்த சமூகம் மறந்தும் அழைப்பதில்லை. அதுபோலவே மரியாவுக்குப் 'புனித' என்ற மணிமுடி வெறுமனே தரப்பட்ட ஒன்றல்ல என்பதை நாம் நினைவுகளில் எப்போதும் நிலைத்திருக்கச் செய்ய வேண்டும் என்பதே நம் பிராத்தனையாக இருந்தால் மிகவும் நலம்பயக்கும். தர்ம பிரபு! என்பது எப்படி தர்மம் செய்தல் என்ற செயலைச் சுட்டிக்காட்டுகிறதோ அதையொத்ததே புனித மரியாயே என்பதும்.

நன்றி : – **தாயே எங்கள் தஞ்சமே.**

## பெருந்தன்மையே முதற்படி

இதயத்தில பெருந்தன்மை இருந்தால் அது நற்பண்புகளின் அழகாக பிரகாசிக்கும்!.

நற்பண்புகளில் அழகு இருந்தால், அது இல்லத்தில்இணக்கமுடன்வாழத் தூண்டும்!

இல்லத்தில் இணக்கமுடன் வாழ்ந்தால், அது தாய்நாட்டில் சட்டத்தை மதிக்கத் தூண்டும்

தாய்நாட்டில் சட்டத்தை மதிப்பவர்களால் தான் உலகம் முழுவதும் சமாதானத்தை உருவாக்க முடியும்

ரோஸ்பாத்திமா – பொற்பை

Merry Christmas




Happy New Year '13

## "திருக்கல்யாணத்தாய்" சந்தாதாரர்களுக்குளர் அன்பான நினைவூட்டல்

"**திருக்கல்யாணத்தாய்**" மாத இதழின் சந்தாதாரர்களில் பெரும்பாலான சந்தாதாரர்கள் டிசம்பர் மாதத்துடன் முடிவடைவதால் தாங்கள் தங்கள் சந்தாக்களை ஜனவரி முதல் புதுப்பிக்கும்படி அன்புடன் வேண்டுகிறோம். சந்தாதாரர்கள் தங்களின் சந்தாவினை புதுப்பிக்க வரும்போது தங்களுடைய முகவரியோடு இணைக்கப்பட்டுள்ள பதிவு எண்ணையும் எடுத்துவரும்படி கேட்டுக்கொள்கிறோம். சந்தாவை புதுப்பிக்காதவர்களுக்கு மாத இதழ் அனுப்புவது நிறுத்தப்படும்.

**திருக்கல்யாணத்தாய் மாத இதழில் விளம்பரம் செய்து பயனடையுங்கள்.**

தொடர்புக்கு : **பங்குத் தந்தை**

**திருக்கல்யாண மாதா ஆலயம்**

**பொத்தக்காலன்விளை 628 702 தூத்துக்குடி மாவட்டம்,**

**தமிழ்நாடுதொலைபேசி : 04639 – 261230**

**– பங்குத்தந்தை**

# திருக்கல்யாணத்தாய் திருத்தல பெருவிழா
# அன்னையின் அதிசய 100 வது தேர்ப்பவனி
## முக்கிய நிகழ்வுகள்

| நாள் | நிகழ்வுகள் |
|---|---|
| 13.01.13<br>ஞாயிறு | திருவிழா அறிக்கை காலை 7 மணி திருப்பலியில் |
| 14.01.13<br>திங்கள் | திருத்தல திருவிழா கொடியேற்றம் மாலை 6.30 மணி |
| 21.01.13<br>திங்கள் | எட்டாம் திருவிழா<br>பகல் 12 மணி மலையாள திருப்பலி<br>மாலை 7 மணி சிறப்பு நற்கருணை பவனி |
| 22.01.13<br>செவ்வாய் | ஒன்பதாம் திருவிழா<br>பகல் 12 மணி மலையாள திருப்பலி<br>மாலை 6.30 மணி புனிததிருக்கல்யாண அன்னையின் அதிசய அலங்கார 100வது தேர்ப்பவனி<br>இரவு 9 மணி சிறப்பு மாலை ஆராதனை |
| 23.01.13<br>புதன் | பத்தாம் திருவிழா<br>காலை 7மணி பெருவிழா கூட்டுத திருப்பலி<br>பகல் 12 மணி மலையாள திருப்பலி<br>மாலை 6.30 மணி புனித திருக்கல்யாண அன்னையின் அதிசய அலங்கார 100 வது தேர்ப்பவனி |
| 24.01.13 | மாலை. 6.30 மணிக்கு திருவிழா விருந்து |
| 24,25,26 | ஆகிய மூன்று நாட்களும் இரவு புனித செபஸ்தியார் நாடகம் கர்நாடக இசையில் நடைபெறும்.<br>திருவிழாவை ஆயர்களும், 50க்கும் மேற்பட்ட குருக்களும் கலந்து கொண்டு சிறப்பிக்க இருக்கிறார்கள். என்பதை பெருமையுடன் தெரிவித்துக்கொள்கிறோம்.<br>பங்குத்தந்தை |

## திருத்தல வசதிகள்

1.திருத்தல பொருட்கள் வாங்குமிடம்
2.தங்கும் இட வசதி
3.குடிநீர் வசதி
4.உணவு வசதி
5.கழிப்பிட வசதி
6.வாகன வசதி
7.முதலுதவி வசதி
8.நேர்ச்சை மூடி இறக்கும் வசதி
9.நேர்ச்சை காது குத்தும் வசதி
10.நேர்ச்சை அசனம் கொடுக்கும் வசதி

**மேற்கொண்டுள்ள விவரங்களை தெரிந்துகொள்ள பங்குத்தந்தையை தொடர்பு கொள்ளவும்**
**தொடர்பு எண் – 04639 261231,261330**

# வாழ்வு தரும் வார்த்தைகள் – டிசம்பர் – 2012

| தேதி | திருநாட்கள் | வாசகம் | வாசகம் |
|---|---|---|---|
| 1. | | தி.வெ.22:1-7 | லூக் 21:34-36 |
| 2. | திருவருகைக்காலம் ஞாயிறு-1 | ஏரே 33:14-15 | 1தெச 3:12!4:2 |
| | | லூக் 21:25-28,34-36 | |
| 3. | புனித பிரான்சிஸ் சவேரியார்- | | |
| | புனதருக்குரியது | 1கொரி 9:16-19,22-23 | மாற் 16:15-20 |
| 4. | புனித யோவான்; தம்சேன் | ஏசா 11:1-10 | லூக்.10:21-24 |
| 5. | | ஏசா:25:6-10 | மத்.15:29-37. |
| 6. | புனித நிக்கோலாஸ்-புனிதருக்கரியது | ஏசா. 6:1-8 | லூக். 10:1-9 |
| 7. | புனித அம்புரோஸ்- புனதருக்குரியது | எபே. 3:8-12 | யோவா. 10:11-16 |
| 8. | தூய கன்னிமரியாளின் | | |
| | அமலோற்பவம் | தொநூ. 3:9-15,20 | |
| | | எபே 1:3-6,11-12 | லூக். 1:26-38 |
| 9. | திருவருகைக்காலம் ஞாயிறு-2 | பாரூ.5:1-9 | பிலி.1:4-6,8-11 |
| | | | லூக்.3.1-6 |
| 10. | | ஏசா.35:1-10 | லூக்.5:17-26 |
| 11. | புனித தாமசுஸ் | ஏசா.40:1-11 | மத்.18:12-14 |
| 12. | | ஏசா.40:25-31 | மத்.11:28-30 |
| 13. | புனித லூசியா- புனிதருக்குரியது | 2கொரி.10:17-11:2 | மத்.25:1-13 |
| 14. | புனித சிலுவை ஜான் – | | |
| | புனிதருக்குரியது | 1 கொரி.2:1-10 | லூக்.14:25-33 |
| 15. | | சீ.ஞா.48:1-4,9-11 | மத்.17:10-13 |
| 16. | திருவருகைக்காலம் ஞாயிறு-3 | செப்.3:14-18,பிலி.4:4-7 | லூக்.3:10-18 |
| 17. | | தொ.நூ.49:2,8!10 | மத்.1:1-17 |
| 18. | | ஏரே.23:5-8 | மத்.1:18-25 |
| | | நீதி.13:2-7,24-25 | லூக்.1:5-24 |
| 20 | | ஏசா.710-14 | லூக்.1:26-38 |
| 21. | புனித கனிசியஸ் | இபா 2:8-14 | லூக். 1:39-45 |
| 22. | | 1சாமு 1:24-28 | லூக்.1:46-56 |
| 23. | திருவருகைக்காலம் ஞாயிறு-4 | மீக்.5:2-5 | எபி.10:5-10,லூக்1:39-45 |
| 24. | | 2சாமு.7:1-5,8-12,14,16 | லூக்.1:67-79 |
| 25. | கிறிஸ்து பிறப்பு பெருவிழா | ஏசா.9:2-7,தீத்.2:11-14 | லூக்.2:1-14 |
| 26. | புனித ஸ்டீபன் (முடியப்பர்) | தி.பா 6:8-10,7:54-60 | மத்.10:17-22 |
| 27. | திருத்தூதர் யோவான் | 1யோவா 1:2:2 | யோவா 20:2-8 |
| 28. | மாசில்லாத குழந்தைகள் | 1 யோவா 1:5 2:2 | மத்.2:13-18 |
| 29, | புனித தாமஸ் பெக்கட் | 1யோவா 2:3-11 | லூக்.2:22-35 |
| 30. | திருக்குடும்பம் | 1சாமு.1:20-22,24-28 | லூக்.2,41-52 |
| 31. | புனித சில்வஸ்டர்-புனிதருக்குரியது | 1யோவா 2:18-21 | யோவா 1:1-18 |
| | | 1 யோவா 3:1-2,21-24 | |

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | | | | | ■ | | | | 2 |
| 3 | 5 11 | | | | | | | 6 | ■ |
| | | 13 | | | 9 | | | | 7 |
| | | 17 19 | | | | | | 18 | |
| | | | 23 | | | | 22 | | |
| | | | | | | | 26 | | |
| | 15 | | | | ■ | ■ | | | |
| 4 | | 27 | | 16 21 | | | | | |
| | | | | 25 | | | | 20 | |
| 12 | | | 14 | | | | 24 | 10 | 8 |

# விவிலிய குறுக்கெழுத்துப் போட்டி

**பதில்கள் தேடவேண்டிய பகுதி**
**இறைவாக்கினர் புத்தகங்கள்**
**நாகூம் அதிகாரம் 1 – 3,**
**ஆபகூக்கு அதிகாரம் 1 –3,**
**செப்பனியா அதிகாரம் 1 –3,**
**ஆகாய் அதிகாரம் 1 – 2,**
**செக்கரியா அதிகாரம் 1–4**

**விடைகள் வந்து சேரவேண்டிய கடைசிநாள் : 15.12.2012**

## இடமிருந்து வலம்

1. ஆண்டவர் காலடியில் எழுகின்ற புழுதிப்படலம் எது?
5. நேர்மையுள்ளோரை வளைத்துக் கொள்பவர் யார்?
9. ஆண்டவரின் மாட்சியைப்பற்றிய அறிவால் நிறைந்திருப்பது எது?
13. ஆண்டவராகிய என் தலைவரே என்..........................
17. எது குடியற்றுப்போகும்?
21. மலைக்குச் சென்று......................... கொண்டு வாருங்கள்
25.ஆண்டவர்........................மீண்டும் தேற்றுவார்.

## வலமிருந்து இடம்

2 தவீடு பொடி ஆவது எது?
6. பரபரப்பும் கொடுமையும் உள்ள இனம் எது?
10.அவரது பேரொளி ......................ஒளி போல் இருக்கிறது
14.ஆண்டவர் நாளின்.................... கசப்பைக் உண்டாக்கும்
18.காலை தோறும் ஆண்டவர் எனன வழங்குகிறார்?
22.யோசதாக்கின் மகன் யர்ர்?
26. ஒருவர் அடுத்தவரை எந்த மரத்தின் கீழ் இளைப்பாற அழைப்பார்?

## மேலிருந்து கீழ்

3 தேர்ப்படையிலிருந்து பறப்பது எது?
7.வேங்கையை விட விரைவாய் ஓடுவது எவை?
11.ஆண்டவருடைய அடிச்சுவடுகளைத் தொடர்ந்து என்ன புறபபடுகிறது.?
15.நாட வேண்டியது என்ன?
19.சிதறுண்ட மக்கள் என்ன கொண்டு வருவார்கள்?
23.பெராக்கியாவின் மகன் யார்?
27. ஒவ்வொரு அகலுக்கும் எத்தனை மூக்குகள் உள்ளன?.

## கீழிருந்து மேல்

4.உடைத்து கொண்ட குளம்போல் ஆன நகர் எது?
8...........................இன்னும் காத்திருக்கிறது.
12 யாருடைய கூடாரங்களில் வேதனை நிறைந்திருக்கிறது?
16. எதைத் தேடவேண்டும்?
20. செயல்தியேலின் மகன் யஸர்?
24. என்னிடம்................. வாருங்கள் என்கிறார் படைகளின் ஆண்டவர்

# <u>திருத்தல வழிபாடுகள்</u>

= ஒவ்வொரு மாதமும் முதல் சனிக்கிழமை காலை 09.30 மணிக்கு செபமாலை , 10.15 மணி முதல் 11.30 மணி வரை குணமளிக்கும் ஜெப வழிபாடுஅதனைத் தொடர்ந்து ஆலயத்தைச் சுற்றி திருக்கல்யாண அன்னையின் சப்பரப்பவனி நவநாள் திருப்பலி நடைபெறும். தொடர்ந்து அனைவருக்கும் மதிய உணவு வழங்கப்படும். மாலை சிறப்பு மாலை ஆராதனையும் நடைபெறும். மற்ற சனிக்கிழமைகளில் மாலை 6!00 மணிக்கு நவ நாள் திருப்பலியும் நோயாளிகளை மந்திரிக்கும் சடங்கும் நடைபெறும்.

= மாதத்தில் முதல் செவ்வாய் அந்தோணியார் கெபியில் மாலை திருப்பலி.

= மாதத்தில் முதல் புதன் ஆலய கெபியில் மாலை திருப்பலி.

= மாதத்தில் இரண்டாவது புதன் நான்கு சந்தி கெபியில் மாலை திருப்பலி.

= மாதத்தில் முதல் வெள்ளி நோயாளிகளை வீட்டில் சந்தித்து நற்கருணை வழங்குதல்.

= மற்ற நாட்களில் காலை 6!00 மணிக்கு திருப்பலி நடைபெறும்.

= மாதத்தின் முதல் சனி மற்றும் எல்லா ஞாயிற்றுக்கிழமைகளிலும் மாலையில் திவ்ய நற்கருணை ஆசீர் நடைபெறும்.

## <u>இணையூர் வழிபாடுகள்</u>

**<u>கொழுந்தட்டு</u>**

= வாரம் ஒருமுறை ஞாயிறு திருப்பலி மற்றும் மக்களின் தேவைக்கேற்ப வார நாட்களில் திருப்பலி நடைபெறுகிறது.

**<u>நவமுதலூர்</u>**

= வாரத்திற்கு ஒருமுறை திருப்பலி நடைபெறுகிறது.

**<u>வாலத்தூர்</u>**

= மாதத்திற்கு ஒருமுறை திருப்பலியும் தேவைக்கேற்ப மற்ற நாட்களில் திருப்பலியும் நடைபெறுகிறது.

### அடுத்த இதழ்

2013 ஜனவரி மாதஇதழ் திருவிழா சிறப்பு மலராக வெளிவர உள்ளது.

2013 ஜனவரி மாத இதழ் திருக்கல்யாணத்தாய் திருவிழா மற்றும், அன்னையின் அதிசய 100வது தேர்ப்பவனி சிறப்பிதழாக வெளிவர உள்ளது. இவைகளைப் பற்றிய கட்டுரைகள் கவிதைகள் வரவேற்கப்படுகின்றன. படைப்புகள் எங்களை வந்து...

**சேர வேண்டிய கடைசி நாள் : 15-12-2012**

**சந்தாதாரராக ஆகுங்கள் !** **அன்னையின் அருள் பெறுங்கள் !**


Merry
Christmas
&
Happy
New Year
2013
solomon Graphics, Tsy. 9788675143